

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2011

ශ්‍රී ලංකා උඩරට සංවර්ධන අධිකාරිය
இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை
Udarata Development Authority of Sri Lanka

ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.
Ministry of Economic Development

# වාර්ෂික වාර්තාව


## வருடாந்த அறிக்கை

## Annual Report

# 2011

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| **01** | இலக்கு மற்றும் செயற்பணி | **01** |
| **02** | அறிமுகம் | **02** |
| **03** | தலைவரது ஆசிச் செய்தி | **09** |
| **04** | பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி | **11** |
| **05** | முகாமைத்துவச் சபை மற்றும் அதன் செயற்பாடுகள் | **12** |
| **06** | நிர்வாகப் பிரிவு | **14** |
| **07** | அபிவிருத்திப் பிரிவு | **15** |
| **08** | கால்நடைவள அபிவிருத்திக் கருத்திட்டம் | **36** |
| **09** | நிர்மானப் பிரிவு | **40** |
| **10** | நிதி முகாமைப் பிரிவு | **46** |
| **11** | கணக்காய்வ்வாளரது அறிக்க்கை | **52** |



## இலக்கு

அபிமானம் மற்றும் சௌபாபக்கியம் நிறைந்த மலையகப் பிரதேசம்



## செயற்பணிகள்


மலையகப் பிரதேசத்தில் வாழ் மக்களது சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு வேலைத் திட்டங்களை முன்வைத்தல், செயற்படுத்துதல், இணைப்புச் செய்தல் மற்றும் கண்காணித்தல்

# அறிமுகம்

மலையக பிரதேசத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டங்களை இணங்காணுதல், திட்டமிடுதல், செயற்படுத்துதல், இணைப்புச் செய்தல் மற்றும் கண்காணித்தல் பொருட்டு 2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது.

## அதிகாரசபையின் அதிகார எல்லைப் பிரதேசம்

- மத்திய மாகாணம்
  - i கண்டி மாவட்டம்
  - ii மாத்தலை மாவட்டம்
  - iii நுவரெலியா மாவட்டம்
- சப்ரகமுவ மாகாணம்
  - i கோகாலை மாவட்டம்
  - ii இரத்தினபுரி மாவட்டம்
- ஊவா மாகாணம்
  - i பதுளை மாவட்டம்
  - ii மொனராகலை மாவட்டம்
- கிழக்கு மாகாணம்
  - i அம்பாரை மாவட்டம்
    - லாகுகலை பிரதேச செயலகப் பிரிவு
    - பதியதலாவ பிரதேச செயலகப் பிரிவு
    - மஹஓயா பிரதேச செயலகப் பிரிவு



## அதிகாரப் பிரதேசத்தின் ஆரம்பத் தரவுகள்

| தொ.இல | மாகாணம் | மாவட்டம் | பிரதே செயலாளர். பிரிவுகளின் எண். | கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | மத்திய | கண்டி | 20 | 1,188 |
| | | மாத்தளை | 11 | 545 |
| | | நுவரெலியா | 5 | 491 |
| 02 | சப்ரகமுவ | கேகாலை | 11 | 573 |
| | | இரத்தினபுரி | 17 | 575 |
| 03 | ஊவா | பதுலை | 15 | 567 |
| | | மொனராகலை | 11 | 319 |
| 04 | கிழக்கு | அம்பாறை | 3 * | 49 |
| | **மொத்தம்** | | **93** | **4307** |


* அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் 03 மாத்திரமே உரித்தாகும்.

## 2009 ஆம் ஆண்டு முதல் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசம்

அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டிய அதிகார பிரதேசங்களாக கண்டி மாவட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் 2009 ஆம் ஆண்டு முதல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன.

- கலகெதர
- ஹதரலியத்தை
- ஹாரிஸ்பத்துவ
- பூஜாபிடிய
- அகுரனை

} பிரதேச செயலாளர் பிரிவுகள்



## பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் புள்ளிவிபர அறிக்கை

| பிரதேச செயலாளர் பிரிவு | விஸ்தீரம் ச.கி.மீ | பிரிவுகளது எண் | கிராமங்களின் எண். | மொத்த சனத்தொகை | குடும்பங்களின் எண். | சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் எண். |
|---|---|---|---|---|---|---|
| ஹதரலியத்தை | 62.00 | 57 | 112 | 31650 | 9802 | 3400 |
| கலகெதர | 54.00 | 67 | 141 | 39620 | 10548 | 3512 |
| ஹாரிஸ்பதுவ | 59.00 | 84 | 148 | 92007 | 23501 | 8043 |
| பூஜாபிடிய | 50.40 | 67 | 120 | 62477 | 15285 | 5275 |
| அகுரனை | 31.30 | 35 | 113 | 66759 | 13491 | 5221 |
| **மொத்தம்** | 256.70 | 310 | 634 | 292513 | 72627 | 25451 |

## பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப பிரதேசத்தின் தகவல் தொடர்பான அறிக்கை

| தொ.இல | பிரதேச செயலாளர் பிரிவு | பாடசாலை | பன்சலை | | பள்ளி | | கோயில் | கலை நிறுவன எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பாடசாலைகளின் எண்ணிக்கை | பன்சலை எண். | அறநெறி பாடசாலைகளது எண். | முஸ்லீம் பள்ளி | கிறிஸ்தவர் ஆலயம் | | |
| 1 | ஹதரலியத்தை | 22 | 31 | 31 | 2 | - | 1 | 6 |
| 2 | கலகெதர | 20 | 36 | 28 | 3 | 2 | - | 5 |
| 3 | ஹாரிஸ்பதுவ | 28 | 65 | 55 | 11 | - | - | 14 |
| 4 | பூஜாபிடிய | 29 | 59 | 44 | 13 | 1 | 2 | 4 |
| 5 | அகுரனை | 26 | 16 | 17 | 57 | - | 6 | 1 |
| மொத்தம் | | **125** | **207** | **175** | **86** | **3** | **9** | **30** |

எமது பிரதான அபிவிருத்தி வகுதிகள்

வாழ்வாதார அபிவிருத்தி

உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

கல்வி அபிவிருத்தி

# நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

*(2005 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் II ஆவது அத்தியாயத்திற்கு அமைய)*

அ). அதிகார எல்லையினுள் உற்பத்தி இயலுமையை மேம்படுத்துவதற்கு பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சூழல் அபிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதைப் போலவே வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தினுள் அபிவிருத்தி கருத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்

ஆ). செயற்படுத்தப்படுகின்ற அதிகார பிரதேச எல்லையினுள் மொத்த அபிவிருத்தியையும் திட்டமிடுதல் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் விபரமாக ஆராய்ந்து அறிதல்.

இ). வரலாற்று ரீதியான மற்றும் வேறு காரணங்களினால் பின்தங்கியுள்ள சமூகத்தை இணங்கண்டு மற்றும் அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு ஆலோசணைகள் தயாரித்தல், நிதிகளை ஒன்று திரட்டல் மற்றும் கருத்திட்டங்களின் செயற்பாட்டை மேம்படுத்துதல்

ஈ). கண்டி நகரத்தில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட மற்றும் தேசிய மட்டத்தில் அங்கு காணப்படும் கலாசார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை கவனத்திற் கொண்டு, கண்டி நகர மற்றும் உரிமை, கலாசார நிறுவனங்கள் சூழல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை பாதுகாப்பது போன்ற விடயங்களில் இதன் விஷேட கவனத்தை செலுத்துதல்.

உ). ஏதாவது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தினுள் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதனை ஆராய்கின்ற போது மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை இனங்காணும் போது, ஆய்வு செய்கையின் போது மற்றும் செயற்படுத்துகின்ற போது அரசாங்க, அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புக்கள் மற்றும் தனியார் துரையினர் போன்றோரின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளுதல்.

ஊ). ஏதாவது பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தினுள் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதனை விபரமாக ஆராய்கின்ற போது அபிவிருத்தி கருத்திட்டங்களை ஆராய்கின்ற போது மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துகின்ற போது உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் தனியார் துரையினரதும் பிரதிநிதிகளின் பங்குபற்றுகையினையும் பெற்றுக் கொள்ளுதல்.

# நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் பதவியனியினர்

2006.04.01 ஆம் திகதி முதல் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அவ்வப் போது அனுமதித்துக் கொள்ளப்பட்ட அதிகாரசபையின் நிரந்தர பதவியனியினரது ஒழுங்கமைப்பு 2011 ஆம் ஆண்டு ஆகின்ற போது பதவியனியினரது எண்ணிக்கை 50 ஆகக் காணப்பட்டது விபரம் பின்வருமாறு.

# நிறுவனத்தின் பதவியணியினர்

| தொடர் இலக்கம் | பதவி | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள பதவியணியினர் | தற்போது சேவையில் உள்ளோர். | ஏனைய |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | |
| 02 | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | 01 | |
| 03 | பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) | 01 | - | |
| 04 | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 01 | - | |
| 05 | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 02 | 01 | உத்தியோகத்தர் ஒருவர் பதவி நீக்கப்பட்டுள்ளார். |
| 06 | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 02 | 01 | உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடு சென்றுள்ளார். |
| 07 | உதவிப் பணிப்பாளர் (கால்நடைவளம்) | 01 | 01 | |
| 08 | கட்டடப் பொறியியலாளர் | 01 | 01 | |
| 09 | கணக்காளர் | 01 | - | வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். |
| 10 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | |
| 11 | நிதி உதவியாளர் | 01 | 01 | |
| 12 | அபிவிருத்தி உதவியாளர் | 03 | 03 | |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் I | 1 | - | |
| 14 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 04 | 04 | |
| 15 | முகாமை உதவியாளர் | 13 | 13 | |
| 16 | சாரதி | 08 | 08 | |
| 17 | அலுவலக உதவியாளர் (I, II, III) | 05 | 04 | |
| 18 | அலுவலக தொழிலாளர் | 03 | 03 | |
| **மொத்தம்** | | 50 | 43 | |


2011 ஆம் ஆண்டு நிறுவனத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நிரந்தரப் பதவியனியினர் போதியதாக இல்லை என்பதால் ஒப்பந்த அடிப்படையின் கீழ், நாளாந்த அடிப்படையின் கீழ் மற்றும் சேவைக் கொள்வணவு அடிப்படையின் கீழ் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையின் பயிலுனர்கள் 18 பேரும் உதவியாளர்களாக 2011 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்டன.

அதற்கு அமைய 2011 ஆம் ஆண்டின் நிறுவனத்தில் சேவையில் ஈடபட்டிருந்த நிரந்தரமற்ற ஊழியர் படை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

## 2011 நிரந்தரமற்ற ஊழியர் படை

| தொ.இல | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையின் கீழ் | | |
| 01 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| 02 | முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| 03 | அலுவலக உதவியாளர் | 01 |
| நாளந்த அடிப்படையில் | | |
| 01 | முகாமைத்தவ உதவியாளர் | 01 |
| 02 | சாரதி | 02 |
| செவைக கொள்வணவு | | |
| 01 | காவற்காரர் | 02 |
| பயிலனர் அடிப்படையில் | | |
| 01 | பயிலுனர்கள் | 18 |
| **மொத்தம்.** | | **31** |

## நிறுவன ஒழுங்கமைப்பு



## தலைவரது ஆசிச் செய்தி



“2005 இன் 26 ஆம் இலக்க இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்” இன் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை மலையக பிரதேசத்திள் காணப்படும் வளங்களை சக்திமிக்கதாகவும் பிரமானங்களை இணங்கண்டு புதிய அபிவிருத்தி கருத்திட்டங்களை திட்டமிடுதல், செயற்படுத்துதல், இணைப்புச் செய்தல் போன்ற நோக்கத்தை இலக்காகக் கொண்டு கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

வளமான இல்லம் வியக்கத்தகு தாய்நாட்டை கட்டி எழுப்பும் நோக்கில் அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்களது ஆலோசனைக்கு அமைய மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் இராஜபக்ஷ அவர்களது வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து அதிகார சபைக்கு பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசமான கண்டி மாவட்டத்தின் ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, அகுரனை, போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 2011 ஆம் ஆண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இங்கு விஷேடமாக பயனுகாரி மக்களது வாழ்வாதார வழிமுறையை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு சுயதொழில் முறைகளை இனங்கண்டு கொடுத்தல், வழிகாட்டல், தேவையான பயிற்சிகள் மற்றும் உள்ளீடுகளை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றிற்கான விஷேட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டன. வீட்டுத் தோட்டம் செய்தல் அழகு இலை பயிர்ச் செய்கை, காளான் உற்பத்தி, அழகுசாதன உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், மூளிகை உறை உற்பத்தி, நாற்று மேடை அமைத்தல், மஞ்சள் மற்றும் இஞ்சி உற்பத்தி, தேனி வளர்ப்பு, பால்மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற கருத்திட்டங்களின் பொருட்டு இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

விவசாய துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களை பயிர்ச் செய்வதன் நிமித்தம் தேவையான சிறுநீர்ப்பாசனத்திட்டம் அதேப் போல் கிராமிய பயிச் செய்கைகளை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கு விவசாய வீதி அபிவிருத்தி பொருட்டு கடந்த ஆண்டு விஷேட கவனம் செலத்தப்பட்டது.

பொருளாதார துறையைப போலவே கல்வித் துறையிலும் அபிவிருத்தி செய்வதன் நிமித்தம் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு பாடசாலை மாணவர்கள் விவசாய துறையில் ஈடுபடுத்துவதன் நிமித்தம் பாடசாலை சூழல் வேலைத் திட்டங்கள், மருத்துவத் தோட்டச் செய்கை, புதிய அறநெறிப் பாடசாலைகளின் உருவாக்கம், தற்போது காணப்படும் அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தி, முன்பள்ளி அபிவிருத்தி, போதை ஒழிப்பு வேலைத் திட்டங்கள் கலை கலாசார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தலைமை பயிற்சி வேலைத்திட்டங்கள் மலசலகூட மற்றும் சுகாதார வேலைத் திட்டங்கள், சிறுவர் மகளீர் மற்றும் முதியோர் நலனோம்பல் வேலைத் திட்டங்கள்

பெற்றோரை கௌரவப்படுத்துதல் பௌத்த மத போதனைகள், போதி பூஜா, பிங்கம் போன்ற வேலைத்திட்டங்கள் பல 2011 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டன.

2011 ஆம் ஆண்டின் பொருட்டு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டு இருப்பது வருடத்தின் இறுதி அறைப் பகுதியில் அதாவது செப்டம்பர் மாதம் அளவில் ரூபா. 192 மில்லியன், அதாவது ஒதக்கீடுகளின் 90% அபிவிருத்தி நடவடிக்கையின் பொருட்டு வெற்றிகரமாக செலவு செய்ய இயலுமானது. அதேப் போல் 2007 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இன்னும் முடிவருத்தப்படாத கருத்திட்டங்கள் பல 2011 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு முடிவுருத்தப்பட்டது. பதுளை, போகஹ, கும்புருதென்ன விவசாய வீதி, அகுரனை உடவெலிகெடிய பாலம் மற்றும் நுழைவு வீதி நிர்மானம், தங்கொல்ல மவுன்ட் பிரசன்ட் தோட்ட வீதி போன்ற கருத்திட்டங்கள் இங்கு முடிவருத்த முடியுமாக இருந்தது. மேலும் ஹதரலியத்தை விவல பாலம், பியராபிடிய ஹொரேகொடை வீதி, அகுரனை சித்தோடை பாலம், கொத்மலை மல்லன்த, மாவெலை, நவதிஸ்பனே போன்ற இடங்களில் நிர்மானிக்கப்பட்டு வந்த பல்அம்ச கட்டடங்கள் போன்ற முடிவருத்தப்படாத கருத்திட்டங்களின் நிர்மானப் பணிகள் மீண்டும் அரம்பிக்கப்பட்டு 60% அளவு முடிவுருத்த இயலுமானதுடன் 2012 ஆம் ஆண்டு இக்கருத்திட்டம் முடிவருத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

இவ்வகையில் 2010 ஆம் ஆண்டு எதிர்பார்த்த அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு துனை நிற்கும் கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல வெற்றிகரமாக முடிவுருத்துவதன் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பெசில் இராஜபக்ஷ அவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட, சகல பதவியனியினருக்கும், அதேப் போல் எமது அதிகார சபையின் சகல பதவியனியினருக்கும், உரிய பிரிவுகளில் பதவியனியினர் யாவருக்கும், சகல விதத்திலும் உதவி நல்கிய நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் இவ்வேலையில் நன்றி கூறுவதில் நான் பெறுமிதம் அடைகின்றேன்.

**அமரனந்த வீரசிங்க**

தலைவர்.

# பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி

இலங்கை மலையக பிரதேசம் பிரித்தானிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு இருந்த காலத்தின் பின்னர் மலையகப் பிரதேசங்களில் வாழ் மக்களுக்கு ஏற்பட்ட சமூக பொருளாதார மற்றும் ஏனைய பல்வேறு இடர்களின் பொருட்டு அவற்றிற்கு நிலையான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கில் அப்பிரதேசங்களை விரைவாக அபிவிருத்தி அடையச் செய்தல் மற்றும் பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை அதன் செயற்பாடுகள் மற்றும் வேலை நடவடிக்கைகள் என்பவற்றை 2011 ஆம் ஆண்டிலும் பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஆரம்பித்து அமுலாக்கியது எனலாம். அதிகாரசபைக்கு உரிய வளங்களைப் போலவே பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் மற்றும் பிரமானங்களை இனங்கண்டு அவற்றினை உச்சப் பயன்படுத்தி விரிவான இலக்குடன் பல்வேறு வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தி உச்சப் பயன்பாட்டை அடைந்துக் கொண்டது.

அதற்கு அமைய விஷேடமாக வாழ்வாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய ஒவ்வொரு பிரதேசத்திலும் நிலவும் சந்தர்ப்பங்கள், பிரச்சினைகள், பின்னடைந்துள்ள பிரிவுகள், பயனுகாரி குழு, குழு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக விஷேடமாக கவனத்திற் கொண்டு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை திட்டமிட்டு அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் ஊடாக 2011 ஆம் ஆண்டு நாட்டில் முன்னுரிமை அபிவிருத்தி வேலைத்திட்டமான தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி சமூகத்தில் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ துனை நிற்கின்ற கிராமிய மட்டத்தில் இனங்காணப்பட்ட கருத்திட்டங்கள் பல செயற்பாட்டில் மேம்படுத்த இயலுமாக இருந்தது. அங்கு கிராமிய சிறுநீர்ப்பாசன மற்றும் விவசாய வீதி அபிவிருத்தி பல்வேறு சுய தொழில் அபிவிருத்தி என்பவற்றை இணங்கண்டு கொடுத்தல். வழிகாட்டல் மற்றும் தேவையான பயிற்சி மற்றும் உள்ளீடுகளை பெற்றுக் கொடுத்தல், வீட்டுத் தோட்டச் செய்கை, பல்வேறு அழங்கார இலை வளர்ப்பு, காலான் உற்பத்தி, அழங்கார உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், முளிகை உறை உற்பத்தி, நாற்று மேடை அமைத்தல், மஞ்சள் இஞ்சி பயிர்ச் செய்கை தேன் வளர்ப்பு, பால்மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளாப்பு போன்ற கருத்திட்டங்கள் விஷேடமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

கல்வி அபிவிருத்தியை விஷேடமாகக் கொண்டு புதிய அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்தல் தற்போது உள்ள அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் முன்பள்ளி அபிவிருத்தி, போதை ஒழிப்பு வேலைத்திட்டங்கள், கலை கலாசார அபிவிருத்தி, எண்ணக்கரு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், தலைமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்கள், வாழ்வாதார வேலைத்திட்ட அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள் பல மிகவும் வெற்றிகரமாகவும் தேவைப்பாட்டுடனும் செயற்படுத்தப்பட்டன. அத்துடன் வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு முதலீடு செய்யப்பட்ட நிதித் தொகை ரூபா.192 ஆகும்.

அதேப் போல் மாவட்டங்கள் 08 இனைக் கொண்டுள்ள அதிகார சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் இதற்கு முன்னய வருடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட ஆயினும் வேலை முடிவுருத்தப்படாத பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பொருட்டு ஆராய்ந்து 2009, 2010, ஆம் ஆண்டுகளின் கருத்திட்டங்கள் சில வேலை முடிவுருத்தப்படாது இருந்ததுடன் மீதமாக இருந்த அபிவிருத்தி கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டு முடிவுருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைய இவ்வதிகார சபையின் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கமானது பிரதேச அபிவிருத்தியை மிகவும் விரைவாக மேற்கொள்வதுடன் கிராமிய பிரதேசங்களில் விரைவான அபிவிருத்தியின் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்டு மற்றும் திறனாக மலையக மக்களுக்கு எழுச்சியை ஏற்படுத்தவதற்கு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை 2011 ஆம் ஆண்டு மேற்கூறப்பட்ட நோக்கங்களை செயற்படுத்தியது.

**எஸ்.எம்.எஸ்.பீ.சமரகோண்**
பணிப்பாளர் நாயகம்.

# முகாமைத்துவச் சபை

## i. அறிமுகம்

அதிகௌரவ ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்டுள்ள எட்டு (08) உறுப்பினர்களை உள்ளடக்கி அம் முகாமைத்துவச் சபை அமையப் பெற்றுள்ளது. இம் முகாமைத்துவச் சபையின் ஊடாக அதிகாரசபையின் சகல நடவடிக்கைகளும் முகாமைத்துவம் செய்யப்பட்டு அதிகாரசபையின் நோக்கங்கள் யாவற்றையும் செயற்படுத்தி மேம்படுத்துவதற்கு தேவையான அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் செயற்பாடுகள் என்பன இம்முகாமைச் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

## ii முகாதைத்துவச் சபையின் கட்டமைப்பு (சட்டத்தின் முதலாவது அத்தியாயத்தின் நான்காம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய)

i ***உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினர்களின் நியமன எண்ணிக்கை மூன்று (03)***

(மலையக அபிவிருத்தி அதிகார சபையின் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர், திரைசேரியின் பிரதிச் செயலாளர் நிலையில் உள்ள உத்தியோகத்தர், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் பெயர் குறிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர்)

ii. ***உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள் ஐந்து (05)***

(விடயப் பொறுப்பு அமைச்சரது சிபாரிசின் கீழ் ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்)

## 03. முகாமைத்துவச் சபையின் உறுப்பினர்கள் 2011 ஆம் ஆண்டு

| தொ .இல | உறுப்பினர்களது பெயர் | உறுப்புரிமையின் தன்மை | | நியமனத் திகதி | நீங்கிய திகதி | மீள நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | திரு.அமரனந்த வீரசிங்க | உத்தியோகப் பற்றற்ற | தலைவர்/முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2008.12.31 | - | |
| 02 | திரு உதய ரன்ஜித் செனவிரத்ன மேலதிகச் செயலாளர் | உத்தியோகப் பற்றுள்ள | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2009.12.03 | 2010.06.04 | |
| 03 | திரு.ஆர்.பி.பியதாச இரத்நாயக்க | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2008.02.06 | 2010.06.04 | |
| 04 | திரு.ஓவன்.சி.மீகஸ்தென்ன | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2008.02.06 | 2010.06.04 | |
| 05 | திரு.எஸ்.ஆர்.கருனாரத்ன | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2009.01.20 | 2010.06.04 | 2010.08.19 |
| 06 | திருமதி.கே.ஜி.கே.விமலவீர (பணிப்பாளர்) | உத்தியோகப் பற்றுள்ள | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010.09.15 | | |
| 07 | திரு.அசங்க பண்டார தொடங்கொடை | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010.08.19 | 2011.0916 | |
| 08 | திரு.அப்துல் வாஹித் மொஹமட் | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010.08.19 | - | |
| 09 | திரு.வோல்டர் இரனசிங்க | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2010.08.19 | - | |
| 10 | திருமதி.சீதா சேனாரத்ன | உத்தியோகப் பற்றற்ற | முகாமைத்துவச் சபை உறுப்பினர் | 2011.02.09 | 2011.12.02 | |

## 04. முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

இவ் அதிகாரசபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் ஊடாக முகாமைத்துவச் சபைக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சட்டத்தின் II ஆவது அத்தியாயத்தில் அவ்வதிகாரங்கள் தொடர்பில் மிகவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்களுக்கு அமைய மலையகப் பிரதேசத்தினுள் உற்பத்தி இயலுமையை மேம்படுத்துதல், வருமானத்தை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்கல் போன்றவை மற்றும் பொருளாதார சமூக கலாசார மற்றும் சூழல் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதற்கு தேவையான அபிவிருத்திக் கருத்திட்டங்களை இணங்காணுதல், திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் இணைப்புச் செய்தல் போன்ற பல்வேறு திட்டமிடல்கள் தொடர்பிலும் திட்டமிடுவதற்கான அதிகாரம் முகாமைத்துவச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## 05. முகாமைத்துவச் சபையினால் 2011 ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் மீளாய்வுக் குறிப்பு

2011 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவ சபை ஒன்று கூடல் 13 இடம் பெற்றுள்ளதுடன் இவ்வொன்று கூடல்களின் போது விஷேடமாக கவனத்திற் கொண்ட விடயமாக அதிகார சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதன் பொருட்டு தேவையான ஒழுங்கு விதிகளை அனுமதித்துக் கொள்வதைப் போலவே அதிகார சபைக்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அத்துடன் இங்கு மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் சில

- ஊடகங்களுக்கு அறிவூட்டல் செய்யும் கலந்துரையாடல் இடம் பெற்றது.
- நிதிப் பிரமானங்களுக்கு அமைய செலவு செய்தல் மற்றும் அதிகாரப் பகிர்வை அங்கிகரித்தல்.
- வரவு செலவு மதிப்பிட்டை அனுமதித்துக் கொள்ளல்.
- அபிவிருத்தித் திட்டங்களை அனுமதித்துக் கொள்ளல்.
- வெற்றிடமாகி இருந்த கட்டட பொறியியலாளர், உதவிப் பணிப்பாளர் (கால்நடைவள), அலுவலக உதவியாளர் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் தேவை பற்றி தீர்மானம் எடுத்தல்.
- வருடத்திற்கு தேவையான செலவு விபரத்தை திருத்தம் செய்தல்.
- முடிவுறா கருத்திட்டங்களை ஆரம்பித்தல் செயற்படுத்தல்.
- வாழ்வாதார மற்றும் கல்வி விரைவான அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆலோசனகள் வழங்கள்.
- கன்று விற்பனை நிலையம் ஒன்றினை ஆரம்பித்தல்.
- கால்நடை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு உதவிப் பணிப்பாளர் ஆட்சேர்ப்பு செய்து கால்நடைவள அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.
- மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் மீண்டுவரும் மற்றும் மூலதன மற்றும் பல்வேறு வருமான அறிக்கைகள் அனுமதித்துக் கொள்ளல்.
- இல்லப் பொருளாதார முறையை மேம்படுத்தும் பொருட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகள் வழங்குதல்.
- அதிகார சபைக்கு தேவையான சட்டச் சபையை நியமித்தல்.
- வெளிநாட்டு புலமைப் பரிசில் பொருட்டு உத்தியோகத்தர்களை அனுப்புவதற்காக அனுமதியை பெற்றுக் கொள்ளல்.
- பாடசாலை சூழல் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் மஞ்சள் இஞ்சி நடுகைக் கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களின் பொருட்டு அனுமதியை பெற்றுக் கொள்ளல்.
- வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு தேவையான ஆலோசனைகள் மற்றும் அனுமதியை பெற்றுக் கொள்ளல்.

## நிர்வாகப் பிரிவு

நிறுவனத்தினுள் சகல மானித மற்றும் பௌதீக வளங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்து நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான பங்களிப்பை நிர்வாகப் பிரிவின் ஊடாக 2011 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

### பதவியனியனரின் பயிற்சி வேலைத்திட்டம் - 2011

நிறுவனத்திற்கு கையளிக்கப்படுகின்ற சகல பொறுப்புக்களையும் உரிய முறையில் மேற்கொள்வதன் பொருட்டு மனிதவள அறிவினை மேம்படுத்துவதற்கு 2011 ஆம் ஆண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் பொருட்டு பதவியனியினரை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கொரியாவே ஹொங்கொங் தேசிய பல்கலைக்கழகத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற விவசாய மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி உத்தியோகத்தர்கள் பங்குபற்ற வில்லை
- திட்டமிடல் பயிற்சி வேலைத்திட்டங்கள்
- தனியாள் கோவை பராமரிப்பு முறை
- கடிதம் எழுதுதல் மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள்
- இணையதளம் மற்றும் மின் அஞ்சல்
- நேர முகாமை
- ஒளிப்பிரதிகள் பெற்றுக் கொள்வது தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டம்
- E – Government
- கணக்கு வைப்பு தொடர்பில் பதவியனியினருக்கு அறிவூட்டும் பயிற்சி வேலைத்திட்டம்.

இந்த பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதன் பிரதான நோக்கம் யாதெனில் பதவியனியினர் தாம் ஈடுபட்டுள்ள அலுவலில் அது தொடர்பான விரிவான அறிவைப் பெற்றுக் கொள்வதாகும். அவ்வாறே உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் பொருட்டு அவர்கள் ஈடுபடவும் மற்றும் மிகவும் திறனாக அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதே பிரதான நோக்காகும். மேலும் பிற நிறுவனங்களில் இருந்து கொடுப்பனவு ஒன்றின் மூலம் இருந்து பெற்றுக் கொள்ளும் சேவைகள் சிற்சில சேவைகள் நிறுவனத்தின் உள்ளே பெற்றுக் கொள்வதற்கு இப்பயிற்சி பாடநெறிகள் துனை நிற்கின்றது.

நிறுவனத்திற்கு உரிய மனிதவளம் முறையாக முகாமைத்துவம் செய்து நிறுவனத்தின் நிர்வாக மற்றும் எதிர்பார்த்த அபிவிருத்தி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நிர்வாகப் பிரிவின் ஊடாக 2011 ஆம் ஆண்டு விஷேட செயற்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

# அபிவிருத்திப் பிரிவு

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிய அதிகாரப் பிரதேசத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மீளாய்வுச் செய்தல் என்பன அபிவிருத்திப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளாகும். அதிகார சபையின் பிரதான வகுதிகள் 03 அதாவது, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, பொருளாதார வாழ்வாதார அபிவிருத்தி, மற்றும் கல்வி அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள் இங்கு செயற்படுத்தப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டு வாழ்வாதார கருத்திட்டத்தின் பால் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

## <u>வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டம்</u>

<u>அறிவூட்டல் வேலைத்திட்டம்.</u>

- 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தினுள் அதிகார சபைக்கு உரிய பிரதேச செயலாளர் பிரிவுகள் 05 இல் மகளீர் சங்கங்கள் பொருட்டு புதிய உறுப்பினர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அபிவிருத்தி ஆலோசனைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- 2011 ஆம் ஆண்டு தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டமான தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டம் தொடர்பாக மற்றும் 2010 ஆம் ஆண்டு அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்தல் பொருட்டு ஊடகவியலாளர் கலந்துரையாடல் முன்வைக்கப்பட்டது.




- பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ.பசில் ராஜபக்ஷ அவர்களது தலைமையில் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையில் இடம் பெற்ற கலந்துரையாடல்
- ஹுதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, மற்றும் அக்குரனை போன்ற பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தில் அனைத்து உதவி சேவை நிறுவன உத்தியோகத்தர்களையும் அறிவூட்டல் செய்தல் (தேசத்தை கட்டி எழுப்பும் வேலைத் திட்டம்)





**தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டம் - கலகெதர**



**தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டம் - ஹதரலியத்தை**

இடம்பெற்ற தேசத்தை கட்டி எழுப்புவோம் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப வேலை



தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டம் - ஹாரிஸ்பதுவ



தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத்திட்டம் - பூஜாபிடிய

- ❖ நாற்றுமேடை மேற்கொள்ளும் 52 பேரினை அறிவூட்டும் வேலைத்திட்டம்.
- ❖ எற்றுமதி அபிவிருத்தி சபையை தொடர்புக் கொண்டு அழங்கார இலைச் செய்கை மற்றும் எந்தூரியச் செய்கைகை பிரபல்யப்படுத்தல் தொடர்பான ஆரம்ப கலந்தரையாடல்.
- ❖ பாடசாலை சூழல் வேலைத் திட்டத்தை செயற்படுத்தவது தொடர்பில் நுகவெல மத்திய மகாவித்தியாலத்தின் இடம் பெற்ற ஆரம்ப கலந்துரையாடல்.
- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 59 பேரின் பொருட்டு எந்தூரியன் மற்றும் அழங்கார இலைச் செய்கை தொடர்பாக அறிவூட்டல்.

- அதிகாரப் பிரதேசத்தினுள் தொழில்வாய்பற்ற இளைஞர் யுவதிகளின் பொருட்டு சுயதொழில் வாய்ப்பாக அழங்காரப்படுத்தல் கருத்திட்டம் செயற்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டோர் அறிவுட்டப்பட்டனர்.
- வாழ்வாதார மற்றும் கல்வி விரைவுபடுத்தும் அபிவிருத்தி வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு அதிகாரப் பிரதேசத்தினுள் அரசியல் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டல்.

## 2 பயிற்சி வேலைத்திட்டம்

- ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 394 பேர் பங்குபற்றுகையுடன் மஞ்சள் மற்றும் இஞ்சி பயிர்ச் செய்கையை பிரபல்யப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம்.

- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் ஸ்ரீ விசுத்தாராம விகாரையில் பயனுகாரிகள் 19 பேர் பங்குபற்றுகையுடன் இஞ்சி, மஞ்சள் செய்கை பிரபல்யப்படுத்தும் நோக்கில் பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துதல் (படம் இலக்கம் 1 மற்றும் 2)



(1)



(2)

- கலகெதர பிரதேச கமநல சேவை பணிமனையில் பயனுகாரிகள் 190 பேர் பங்குபற்றுகையுடன் இஞ்சி, மஞ்சள் செய்கை பிரபல்யப்படுத்தும் நோக்கில் பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துதல்.

- அக்குரனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 12 பேரின் பொருட்டு ராஜகீய தாவரவியற் பூங்காவில் எந்தூரியம் செய்கை பயிற்சி வழங்கள் வேலைத்திட்டம் நடாத்துதல்

- மாத்தளை கிரனைட்ட பிளான்ட்டஸ் என்ட் நாற்று நடுகையின் பயனுகாரிகள் 53 பேர் பொருட்டு அழங்காரப் பூ செய்கை தொடர்பில் செயன்முறை மற்றும் பயிற்சி பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டம் நடாத்துதல் (ஒளிப்படம் 1 மற்றும் 2 )



(1)



(2)

- ❖ கிராமிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு உள்ள வேலைத் திட்டத்தின் கீழ் ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 100 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

- ❖ மாகாண விவசாய திணைக்களத்துடன் இணைந்து ஹதரலியத்தை, கலகெதர, பூஜாபிடிய, அக்குரனை, கமநலசேவை நிலையஙளின் ஊடாக நாற்றுநடுவோர் பயிற்றுவிக்கப்படுதல்

- ❖ மாகாண விவசாய திணைக்களத்துடன் இணைந்து நாற்று நடுனரை சக்தி பெறச் செய்யும் கருத்திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை உடுவ எம்.பி.தென்னகோன் அவர்களது நாற்று நடுகையின் பயனுகாரிகள் 13 பேர் பயிற்சி அளித்தல் (ஒளிப்படம் 1 மற்றும் 2).



(1)



(2)

- ❖ அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் அலவதுகொடை கொனகலகல விஜித மஹாவிகாரையில் அறநெறிப் பாடசாலை மாணவ தலைவர் தலைவிகள் 52 பேர் பொருட்டு தலைமைத்தவப் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்துதல்.

- ❖ ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயனுகாரிகள் 31 பேர் பொருட்டு தேன் வளர்ப்பு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துதல்.





- ❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 18 பேர் தொட்பில் உடமுதுன மஹாவிஹாரையில் அழங்கார இலை தொடர்பான பயிற்சி வேலையரங்கு நடாத்துதல்

- ❖ ஹரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் அழங்கார இலை பூச் செய்கை தொடர்பாக பயிற்சி வேலையரங்கு நடாத்துதல்.

- ❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 30 பேர் பொருட்டு தேனி வளர்ப்பு தொடர்பாக பயிற்சி வேலையரங்கு நடாத்துதல்.

- ❖ பாடசாலை சூழல் வேலைத்திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, மற்றும் அகுரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விவசாய விஞ்ஞான ஆசிரியர்கள் 23 பேர் பொருட்டு தேனி வளர்ப்பு தொடர்பான செயன்முறை பயிற்சி வழங்குதல்.

- ❖ பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை மற்றும் கலகெதர போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் விவசாய விஞ்ஞான ஆசிரியர்கள் 2 பேர் பொருட்டு தேனி வளர்ப்பு தொடர்பான செயன்முறை பயிற்சி வழங்குதல்.



**விவசாய விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயன்முறை பயிற்சி வழங்குதல்**

- ❖ கம்பொலை சிறு முயற்சியான்மையாளர்களின் அபிவிருத்தி நிறுவனத்தின் வாழ்வாதார வேலைத்திட்டம் மற்றும் அது தொடர்பான உத்தியோகத்தர்களுக்கு காளான் செய்கை தொடர்பாக செயன்முறை பயிற்சி வழங்குதல்.

- ❖ கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனுகாரிகள் பொருட்டு தொழில்நுட்பத் துறை தொடர்பான அறிவூட்டல் வேலையரங்கினை நடாத்துதல்.

# செயற்பாடுகள்

- ❖ ஹுதரலியத்தை, கலகெதர, ஹரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அக்குரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் குரங்குகளின் சேட்டைகளை குறைத்துக் கொள்வதன் நிமித்தம் குரங்குகளை பிடிப்பதற்கான குரங்குக் கூடுகளை வழங்குதல்.

- ❖ அக்குரனை பிரதேச செயலாளர் பிரிவின் 22 பிரதேசங்களில் 77 பயனுகாரிகள் தொடர்பில் மஞ்சள் விதை கி.கிராம் 665 மற்றும் இஞ்சி விதை கி.கிராம் 1136 பேருக்கு வழங்கப்பட்டது. (ஒளிப்பம் 1 மற்றும் 2)




(1) (2)

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 732 பேர் பொருட்டு மஞ்சள் மற்றும் இஞ்சி கிலோ கிராம் 5311 பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் இடம் பெற்றது.

- ❖ கலகெதர கமநல சேவை நிலையத்தில் பயனுகாரிகள் 145 பேர் பொருட்டு மஞ்சள் கி.கிராம் 960 மற்றும் இஞ்சி கி.கிராம் 1975 உம் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- ❖ பூஜாபிடிய கமநல சேவை நிலையத்தில் பயனுகாரிகள் 490 பேர் பொருட்டு மஞ்சள் மற்றும் இஞ்சி கி.கிராம் 1470 பகிர்ந்தளிக்கப்பட்டது.

- ❖ ஹுதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 31 பேர் பொருட்டு தேனி வளர்ப்பிற்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (ஒளிப்படம் இலக்கம் 1 மற்றும் 2)


(1)


(2)

- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 140 பேர் பொருட்டு மஞ்சள் மற்றும் இஞ்சி விதை பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- ஹாரிஸ்பதுவ பயனுகாரிகள் 30 பேர் பொருட்டு தேனி வளர்ப்பு பெட்டி மற்றும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் இடம் பெற்றமை.
- ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் அழங்கார அணிவிப்பாளருக்கான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் இடம் பெறுதல்
- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 29 பேர் பொருட்டு தேனி வளர்ப்பு பெட்டி மற்றும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் இடம் பெற்றமை.
- ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவின் பயனுகாரிகள் 100 பேர் பொருட்டு மூளிகை உறை உற்பத்தி பொருட்டு உள்ளீடுகளை வழங்குதல்.
- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 85 பேர் பொருட்டு தேனி பெட்டிகள் 141 மற்றும் குடிமகன் 85 பேருக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பூஜாபிடிய மெதகொடை விதாதா நிலையத்தில் சிகை அழங்காரம் தொடர்பாக பயனுகாரிகள் 23 பேர் பொருட்டு செயன்முறை பயிற்சி மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல்.
- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகள் 31 பேர் பொருட்டு சாதிக்காய் கன்றுகள் 300 பகிர்ந்தளித்தல்.
- தேசத்தை கட்டி எழுப்புவோம் தேசிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஆரம்ப விழாவின் போது மறக்கறிகள், பழங்கள், மற்றும் மருந்துச் செடிகளுடன் கூடிய செடிகள் சந்தைப்படுத்தல் நிலையம் பேராதனை ராஜகீய தாவரவியற் பூங்காவினுள் ஆரம்பித்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் மக்களுக்கு நடுகைப் பொருட்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருப்பதுடன் அதிகார சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நாற்று நடுகையாளர்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.




பேராதனை தாவரவியற் பூங்காவினள் நடாத்தப்பட்டு வருகின்ற தேசத்தை கட்டி எழுப்புவோம் செடி சந்தைப்படுத்தல் நிலையம்.

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் அறுவடை கொண்டாட்டம் தொடர்பில் விவசாயிகள் 50 பேருக்கு மண்வெட்டிகள் 50 பெற்றுக் கொடுக்கப்பட்டது.
- அகுரனை பிரதேச சபையின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 03 (திப்பிடிய, மாவதுபொலை, தெல்கஸ்கொடை) பயனுகாரிகள் 08 போருக்கு எம்பன் வாழைச் செடிகள் 10 என்றவாறு பகிர்ந்தளித்தல்.

# உற்பத்திகள்

## இஞ்சி உற்பத்தி




திருமதி. பத்ம குமாரி நந்ததிலக்க இஞ்சி நடுகை கருத்திட்டம் (இலக்கம் 69/5, வடகொடை, ஹாரிஸ்பதுவ)




திருமதி.நீதா தமயன்தி தென்னகோ அவர்களது இஞ்சித் நடுகை கருத்திட்டம் (இலக்கம் 38/ஏ, வடகொடை, ஹாரிஸ்பதுவ




திருமதி ருக்மனி ஜயசேகர அவர்களது இஞ்சி கருகை கருத்திட்டம் (இல 99/3, நெல் ஆலை,





திருமதி.ராஜபக்ஷ அவர்களது இஞ்சித் நடுகை கருத்திட்டம் (இலக்கம் 23/3, வடகொடை, ஹாரிஸ்பதுவ

## மஞ்சள் நடுகை



திருமதி பத்மா குமாரி நந்ததிலக்க அவர்களது மஞ்சள் நடுகை கருத்திட்டம் (இலக்ம் 69/5, வடகொடை, ஹரிஸ்பதுவ)





திருமதி நீதா தமயன்தி அவர்களது மஞ்சள் நடுகை கருத்திட்டம் (இலக்ம் 38/ஏ, வடகொடை, ஹரிஸ்பதுவ)




திருமதி சுசந்த ராஜபக்ஷ அவர்களது மஞ்சள் நடுகை கருத்திட்டம் (இலக்ம் 23/3, வடகொடை, ஹரிஸ்பதுவ)

## தேனி வளர்ப்பு




திருமதி.டப்லியு.எம்.அஜன்தா விரேத்ன அவர்களது தேனி வளர்ப்பு கருத்திட்டம் (தீப்தி, தித்தெனிய, பூஜாபிடிய)




திருமதி.டப்லியு.எம்.அஜன்தா விஜேரத்ன அவர்களது தேனி வளர்ப்பு கருத்திட்டம (இலக்கம் 30. வெலிகல்ல, பூஜாபிடிய )





திருமதி.பி.எம்.சமரசிங்க அவர்களது தேனி வளர்ப்பு கருத்திட்டம். (சேன்திராவத்தை, யக்கல, ஹுதரலியத்தை

# கல்வி அபிவிருத்தி

<u>**அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**</u>

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் அறநெறிப் பாடசாலை 44 இனது ஆசிரியர்கள் 80 பேருக்கு பாளி மொழி அறிவூட்டல் தொடர்பான பயிற்சி வேலையரங்கு.

- கலகெதர பிரதேச செயலாளர் பிரிவின் காலியாவ விகாரையில் சிறுவர் நட்பு எண்ணக்கரு அபிவிருத்தி வேலைத்திட்டம் நடாத்துதல்.

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பணிமனையின் உத்தியோகத்தர்கள் பொருட்டு எண்ணக்கரு அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல் வேலை திட்டத்தை நடாத்துதல்.

- ஹரிஸ்பதவ பிரதேச செயலாளர் பணிமனையின் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் 120 பேர் பொருட்டு எண்ணக்கரு மேம்பாட்டு வேலைத் திட்டத்தை நடாத்துதல்





- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் 104 பேருக்கு அறநெறிப் பாடசாலை ஆசிரியர் பயிற்சி வழங்குதல்

- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் மனவாழ்வை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டம் நடாத்துதல்.

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம் நடாத்துதல்.

- ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவின் அறநெறிப் பாடசாலைகள் 31 இல் அறநெறிப் பாடசாலை அசிரியர்கள் 100 பேர் தொடர்பில் அறநெறிப் பாடசாலை ஆசிரிய எண்ணக்கரு அபிவிருத்தி வேலைத்திட்டம் நடாத்துதல்.




அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட எண்ணக்கரு அபிவிருத்தி வேலைத்திட்டம்

- ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவின் அமைந்துள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் 30 பேர் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டம் நடாத்துதல்.
- ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, மற்றும் அகுரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் மலசலகூட வசதிகள் வேலைத் திட்டத்தை அமுலாக்குவதன் பொருட்டு பயனுகாரிகளை அறிவூட்டும் வேலைத்திட்டம்.

## செயற்பாடுகள்

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் ரம்புக்கேவலை ஸ்ரீ ஹேமானந்த அறநெறிப் பாடசாலைக்கு வெள்ளைப் பலகை (white board) 04 மற்றும் பிளாஸ்டிக் கதிரைகள் 12 வழங்கப்பட்டன.

- ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவின் பான்வெல்லகொல்ல, யடிகலகல, போகஹகன்த, போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்குதல்.

- பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் சியபத்கம சிறிசுமேதா அறநெறிப் பாடசாலைக்கு உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல்.

- அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் மஸ்ஜித் ஹாபிழ் இப்றாஹீம் ஹாஜியார் அறநெறிப் பாடசாலைக்கு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல்.

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் அத்தரகம ஸ்ரீ தர்மபால அறநெறிப் பாடசாலை சாரிபுத்த அறநெறிப் பாடசாலை மற்றும் ரவன்பரய போதிரெக்பாரம் அறநெறிப் பாடசாலை என்பவற்றிற்கு உபகரணங்கள் வழங்குதல்.





- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகன்த ஸ்ரீ சுதர்மாராம அறநெறிப் பாடசாலையின் பொருட்டு மலசலகூட வசதிகளை செய்து கொடுத்தல்.

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவின் தம்மாலோக்க அறநெறிப் பாடசாலை கட்டடத்தை புணர்நிர்மானம் செய்தல்.

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவின் தர்மபால அறநெறிப் பாடசாலை பெயரில் புதிய அறநெறிப் பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தல்.





புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட தர்மபால அறநெறிப் பாடசாலை

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் போதொட நூலகத்திற்கு புத்தகங்களை வழங்குதல்.

- ❖ ஹாரிஸ்பதுவ கலாசார நிலையத்தின் நாடளாவிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பொருட்டு புத்தகங்கள் வழங்குதல்.

- ❖ ஹாரிஸ்பதுவ கலாசார நிலையத்தை மையமாக வைத்து சொகரி பிரார்த்தனை செய்தல்
- ❖ பூஜாபிடிய ஞானலோக்க முன்பள்ளி கூறை நிர்மானம்.

- ❖ அகுரனை கொனகலகல ஸ்ரீ விஜித மஹாவிகாரைக்கு பிளாஸ்டிக் கதிரை 50 வழங்குதல்.

❖ பாடசாலை சூழல் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை வீட்டுத் தோட்டத்தின் பொருட்டு நடுகைப் பொருட்கள் வழங்குதல்.

i. ஹுதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 08

ii. கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 10

iii. ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 14

iv. பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 14

v. அகுரனை பிரதேச செயலாளர் பிரிவின் பாடசாலைகளின் எண்ணிக்கை 5





❖ பாடசாலை சூழல் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை வீட்டுத் தோட்டத்தின் பொருட்டு தேனி பெட்டி மற்றும் தேனி வழங்குதல்.

i. ஹுதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 07
ii. கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 09
iii. ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 12
iv. பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பாடசாலைகளின் எண்ணிக்கை 12
v. அகுரனை பிரதேச செயலாளர் பிரிவின் பாடசாலைகளின் எண்ணிக்கை 5





❖ கலகெதர பிரதேச செயலாளர் பிரிவின் கோப்பித் தோட்டம் மற்றும் கிரிஹாகம விகாரையின் போதி பூஜா வேலைத்திட்டம் ஒன்றினை நடாத்துதல்.

❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் மதஸ் தாபனங்கள் 75 இன் பூஜாமுல ஒழுங்கமைப்பு 20 பொது நூலகங்கள் 04 இன் பொருட்டு மருத்துவச் செடிகள் 3306 பகிர்ந்தளித்தல்.

❖ அதி மேன்மைதகு சனாதிபதி அவர்களது இரண்டாவது பதவி ஏற்பு தொடர்பில் "தேயட செவன" மர நடுகை வேலைத் திட்டம்.





❖ கலகெதர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவு மத நிலையங்கள் 05 மருத்துவ தோட்ட ஸ்தாபகத்திற்காக மருத்துவ வகை 34 இன் மருத்துவச் செடிகள் 2964 உரிய மத ஸ்தாபனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் பூஜாவை தலைமைகள் 20 இற்காக மங்குஸ், மாம்பழம், இரம்புட்டான், தூரியன்காய். கொய்யா, மாதுளம், யானைக் கொய்யா, பாணி தோடை, எம்பன் வாழைப்பழம், கருக்காய், மலேசியன் ஜம்பு போன்ற சகல வகையிலும் கன்றுகள் 03 என்றடிப்படையில் கன்றுகள் 720 பகிர்ந்தளிப்பு வேலைத்திட்டம் இடம் பெறுதல்.

❖ கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அகுரனை பிரதேச சபையின் அலுமாரி 27 மற்றும் வெள்ளைப் பலகை 36 என்ற வகையில் அறநெறிப் பாடசாலை உபகரணங்கள் பிரதேச சபைக்கு வழங்குதல்.

❖ கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் ஹாரிஸ்பதுவ, பிரதேச சபைக்கு 3x2 அளவு வைட் போர்ட் 181 மற்றும் கோவை ஆலுமாரி 33 அறநெறிப் பாடசாலை உபகரணங்கள் பிரதேச சபைக்கு வழங்குதல்.

❖ கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஹதரலியத்தை மற்றும் கலகெதர போன்ற பிரதேச செயலாளர் பிரிவுக்கு அறநெறிப் பாடசாலை, தாய்சேய் நலன் நிலையம் பொருட்டு உபகரணங்கள் பிரதேச சபைக்கு வழங்குதல்.

# மலையக நவோதய வானொலி நிகழ்ச்சி

அதிகார சபையில் பெயர் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசத்தில் கிராம மக்களது இயலுமையை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு உரிய ஆற்றல்களை வெளிப்படுத்தும் பொருட்டு வானொலி கூட்டுத்தாபனத்தின் கந்துரட்டை சேவை மற்றும் மலையக நவோதய வானொலி நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் செயற்படுத்தப்படுகின்றன.

❖ 2011.03.31 ஆம் திகதி மலையக எப்.எம்.சேவையுடன் மலையக நவோதய பிரசார வானொலி நிகழ்ச்சித்திட்டம் ஒளிப்பதிவு செய்யப்பட்டது - ஹதரலியத்த






❖ 2011.04.29 ஆம் திகதி மலையக எப்.எம்.சேவையுடன் மலையக நவோதய பிரசார வானொலி நிகழ்ச்சித்திட்டம் ஒளிப்பதிவு செய்யப்பட்டது - கலகெதர





❖ 2011.05.27 - ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் மலையக நவோதய வானொலி நிகழ்ச்சி நடாத்துதல்.

❖ 2011.06.24 பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் ரம்பக்கேவலை கனிஷ்ட வித்தியாலயத்தின் மலையக நவோதய வானொலி நிகழ்ச்சி இடம் பெறுதல்.

❖ 2011.07.28 அகுரனை பிரதேச செயலாளர் பிரிவில் தனுவெலை ரத்னபால பாடசாலையின் மலையக நவோதய வானொலி வேலைத்திட்டம் இடம்பெறுதல்.





- 2011.09.23 – கலகெதர பிரதேச செயலாளர் பிரிவின் கலபாவ மகா வித்தியாலயத்தில் மலையக நவோதய வானொலி நிகழ்ச்சித்திட்டம் இடம் பெறுதல்.
- 2011.10.27. ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் நுகவெல ஆண்கள் பாடசாலையில் மலையக நவோதய வானொலி நிகழ்ச்சித் திட்டம் ஒளிப்பதிவு செய்தல்.
- 2011.11.24 – பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் ஹெனெகம கலாசார பிரிவினாவில் மலையக நவோதய மாதாந்த வானொலி நிகழ்ச்சித் திட்டம் ஒளிப்பதிவு செய்தல்.
- 2011.12.29. – அகுரனை கொனாகல விஹாரையில் மலையக நவோதய மாதாந்த வானொலி நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்தல்.

## ரூபவாஹினி நிகழ்ச்சி

- தலைவர், அதிகார சபையின் முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) திருமதி சீதா சேனாரத்ன மற்றும் அதிகார சபையின் அபிவிருத்தி பணிப்பாளர்களது பங்குபற்றுகையுடன் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 2011.07.27 ஆம் திகதி மு.ப.11.30 முதல் 12.0 மணி வரை சுயாதின தொலைக்காட்சியில் ஒலிபரப்பானது.
- தலைவர், முகாமைத்துவ சபை உறுப்பினர் வொல்டர் ரனசிங்க மற்றும் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஆகியோரது பங்குபற்றுகையுடன் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 201.08.15 ஆம் திகதி பிற்பகல் 6.00 மணி முதல் 6.30 வரை தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பானது

### சர்வதேச தினக் கொண்டாட்ட நிகழ்சிகள்

- சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு ஹுதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய மற்றும் அக்குரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் மகளீர் தின கொண்டாட்டங்கள் இடம் பெற்றது.
- உலக புகைப்பிடித்தல் மற்றும் புகைத்தல் எதிரான தினத்தை முன்னிட்டு ஹுதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில் கேட்போர் கூடத்தில் புகைப் பிடித்தல் பாவிப்பதால் எற்படும் தீமைகள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் இடம் பெற்றது.

❖ ஹதரலியத்தை பிரதேச செயலாளர் பிரிவில் ஹதரலியத்த ஆரம்பப் பிரிவு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் முதியோர் 200 பேருக்கு மற்றும் 50 மாணவர்கள் உட்பட பங்குபறச் செய்து சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினம் என்பன கொண்டாடப்பட்டன.

❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் மாணவர்கள் 110 பேர்களது பங்குபற்றுகையுடன் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

❖ அகுரனை பிரதேச செயலாளர் பிரிவின் முன்பள்ளி பாடசாலை மாணவர்கள் 1003 பேரது பங்குபற்றுகையுடன் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் சமூகம் 40 இனை பிரதி நிதித்துவப்படுத்தி சிறுவர்கள் 110 பேர்களது பங்குபற்றுகையுடன் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.




❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவின் முன்பள்ளி பாடசாலை 36 இனது பிள்ளைகள் 115 பேர்களது பங்குபற்றுகையுடன் உலக சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது.

❖ கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்திற்கு இணையாக வீதி நடனக் கண்காட்சி இடம் பெற்றது.

❖ கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் சர்வதேச முதியோர் தினத்திற்கு இனையாக முதியோர் சங்கங்களின் உறுப்பினர்கள் 400 பேரளவில் பங்குபற்றச் செய்து முதியோர் தினம் நடாத்தப்பட்டது.

## <u>அரச நிறுவனங்கள் மற்றும் நுயாதீன ஒழுங்கமைப்புக்கள் ஒன்றினைந்து செயற்படுத்திய வேலைத்திட்டம்.</u>

❖ மகளீர் நிறுவனங்களுடன் இணைந்து உளவியல் மருத்துவ விரிவுரைகள், மகளீரை சக்தி பெறச் செய்யும் வேலைத் திட்டங்கள், சிறுவர் மற்றும் போசாக்கு வேலைத் திட்டங்கள், மகளீரது விஷேட பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுதல், திருமன வாழ்வை எதிர்பார்த்து இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வதிகார பிரதேச எல்லையினுள் இடம் பெற்றது.

❖ மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரது முன்னுரிமை பிரதேச மட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அதிகார பிரதேசத்திற்கு உரிய பிரதேச செயலாளர் பணிமனைகளின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் தொடர்பான உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல்.

- மத்திய மாகாண கலாசார திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை நடாத்துதல்.
- மதஸ்தானங்களில் அருகில் மருந்தக செடித் தோட்ட அபிவிருத்தி தொடர்பில் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மற்றும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.





- மத்திய மாகாணத்தின் சூழல் அதிகார சபை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.
- வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தி கருத்திட்டத்தை செயற்படுத்தும் போது சமூக சேவைத் திணைக்களத்தின் பங்களிப்பை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு மத்திய மாகாண சமூக சேவை திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் மற்றும் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல்.
- மலையகத்தை உள்ளடக்கியதாக கலாசாரங்களை இனங்கண்டு பாதுகாத்தல் மற்றும் களைஞர்களை உட்சாகப்படுத்தும் பொருட்டு அதிகார சபையின் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேச பிரிவுகள் 05 இல் கலாசார உத்தியோகத்தர்களுடன் கலந்தரையாடுதல்.
- அதிகார சபையின் அதிகார பிரதேசத்தில் இளைஞர் யுவதிகளின் பல்வேறு திறமைகளை இனங்கண்டு அத்திறமைகளை மேம்படுத்தும் பொருட்டு அவர்களை விழிப்பூட்டும் பொருட்டு மத்திய மாகாண இளைஞர் சேவை குழுவின் உதவிப் பணிப்பாளர் மற்றும் ஹதரலியத்தை, கலகெதர, ஹாரிஸ்பதுவ, பூஜாபிடிய, மற்றும் அக்குரனை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் 05 இல் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுடன் ஆரம்ப கலந்துரையாடல் இடம் பெறுதல்.







**அதிகார சபையின் ஊடாக போதை ஒழிப்பு கருத்திட்டத்தின் விளம்பர வேலைத்திட்டம்.**

- அதிகார சபையின் அதிகார பிரதேசத்தினுள் போதை ஒழிப்பு வேலைத் திட்டம் மற்றும் மக்களது போதை மற்றும் புகைப்பிடித்தல் என்பவற்றை விடுவிப்புச் செய்வது தொடர்பில் அதிகாரசபை உத்தியோகத்தர்களை அறிவூட்டல் வேலைத்திட்டம் மது போதை தகவல் நிலையத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.

# சுகாதார சேவை வேலைத்திட்டம்.

- ❖ பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் அரம்ப சுகாதார தேவைப்பாடுகளுக்காக மலசலகூட வசதிகளை செய்து கொடுப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு தெரிவு செய்யப்பட்ட மலசலகூட வசதிகள் இல்லாத குடும்பங்கள் 413 இற்கு நிர்மானத்தின் பொருட்டு தேவையான சீமேந்து புளக்கல், சீமேநது கோட்டுத் தகரம், மலசலகூட போச்சி என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் ஊடாக குடும்பங்களுக்கு சிறந்த சுகாதார நிலமையை கட்டி எழுப்புதல் மற்றும் சிறந்த சுகாதார பழக்க வழக்கத்தை ஏற்படுத்துதல். பரவு நோயை குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

- ❖ ஹதரலியத்தை சுகாதார நிலையத்தில் கர்ப்பினிகளின் பொருட்டு மாதாந்தம் பெற்றோரை கௌரவப்படுத்தும் வேலைத் திட்டம் நடாத்ததல்

- ❖ ஹதரலியத்தை தாய்சேய் சுகாதார நிலையங்கள் இரண்டு புதுப்பித்தல்.

- ❖ கலகெதர கலபாவ சுகாதார நிலைய திருத்த வேலைகள்

- ❖ அகுரனை கர்ப்பினிகள் பொருட்டு எண்ணக்கரு அபிவிருத்தி வேலைத் திட்டம் நடாத்துதல்.

- ❖ ஹாரிஸ்பதுவ பிரதேச செயலாளர் பிரிவில் சவனாரி சுகாதார நிலையத்தை நடாத்துதல்

- ❖ பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவின் ஹேமானந்த அறநெறிப் பாடசாலையுடன் இணைந்து இரத்த தானம் செய்யும் வேலைத்திட்டத்தை நடாத்துதல்.



1



2

# சிறுநீர்ப்பாசனத்திட்டம் மற்றும் விவசாய வீதி அபிவிருத்தி கருத்திட்டம்.

| தெ இ | பிரதேச செயலாளர் பிரிவு | கருத்திட்டம் | அனுமதிக்கப்படட மொ.கருத்திட்ட எண்ணிக்கை | மேற்கொண்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட கருத்திட்ட எண். | 2011.12.31 செலவிடப்பட்ட நிதி தொகை | முடிவுறா க.எண். | பினை.கை. கரு.எண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஹதரலியத்தை | சிறுநீர்ப்பாசன | 44 | 44 | 43 | 7.06 | 4 | 6 |
| | | விவசாய வீதி | 83 | 75 | 64 | 13.57 | 14 | 11 |
| 02 | கலகெதர | சிறுநீர்ப்பாசன | 64 | 46 | 44 | 7.74 | 8 | 12 |
| | | விவசாய வீதி | 130 | 112 | 105 | 10.01 | 49 | 23 |
| 03 | ஹாரிஸ்பதுவ | சிறுநீர்ப்பாசன | 113 | 101 | 101 | 24.88 | 22 | 8 |
| | | விவசாய வீதி | 54 | 30 | 29 | 5.32 | 5 | - |
| 04 | பூஜாபிடிய | சிறுநீர்ப்பாசன | 89 | 79 | 73 | 12.73 | 31 | 2 |
| | | விவசாய வீதி | 44 | 42 | 40 | 5.54 | 7 | 8 |
| 05 | அகுரனை | சிறுநீர்ப்பாசன | 30 | 30 | 30 | 5.61 | 9 | 2 |
| | | விவசாய வீதி | 26 | 23 | 23 | 1.67 | 11 | 4 |
| **மொத்தம்.** | | | **677** | **582** | **552** | **94.13** | **160** | **76** |

# கால்நடை அபிவிருத்தி கருத்திட்டம்

அதிகார சபைக்கு உரிய பிரதேசத்தினுள் கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டம் செயற்படுத்தக் கூடிய தேவையின் கீழ் 2011.09.19 ஆம் திகதி உதவிப் பணிப்பாளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு கால்நடை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

- பால்மாடு வளர்ப்பு வேலைத்திட்டம்
- ஆடு வளர்ப்பு வேலைத்திட்டம்
- கோழி வளர்ப்பு வேலைத்திட்டம்

இக்கருத்திட்டத்தை ஆரம்பம் செய்வதன் நிமித்தம் ஆரம்ப நடவடிக்கையாக கால்நடை வளர்ப்பு தொடர்பில் அறிவூட்டுவதற்காக ஆரம்ப ஒன்று கூடல் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் நடாத்தப்பட்டு இடங்களை பரீட்சித்து பார்த்ததன் பின்னர் பயனுகாரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

| தொ. இல | பிரதேச செயலாளர்.பி | பால்மாடு வளர்ப்பு | | ஆடு வளர்ப்பு | | கோழி வளர்ப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விண்ணப்பித்த பயனுகாரிகளின் எண். | தெரிவு செய்த பயனு.எண். | விண்ணப்பித்த பயனுகாரிகளின் எண். | தெரிவு செய்த பயனு.எண். | விண்ணப்பித்த பயனுகாரிகளின் எண். | தெரிவு செய்த பயனு.எண். |
| 01 | ஹதரலியத்தை | 37 | 13 | 48 | 11 | 48 | 32 |
| 02 | கலகெதர | 21 | 09 | 21 | 13 | 98 | 74 |
| 03 | ஹாரிஸ்பதுவ | 26 | 08 | 37 | 10 | 107 | 38 |
| 04 | பூஜாபிடிய | 20 | 12 | 24 | 08 | 38 | 27 |
| 05 | அகுரனை | 29 | 11 | 40 | 13 | 164 | 81 |

பயனுகாரிகள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இந்த சகல கருத்திட்டங்கள் பொருட்டும் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டு பயனுகாரிகள் அறிவூட்டப்படுகின்றனர்.





பால் மாடு வளர்ப்பு கருத்திட்டத்தின் பொருட்டு நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம்.





ஆடு வளர்ப்பு கருத்திட்டத்தின் பொருட்டு நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம்.

09. கோழி வளர்ப்பு கருத்திட்டத்தின் கீழ் உரிய பயனுகாரிகள் பொருட்டு பயிற்சி வேலைத் திட்டம் நான்கு நடாத்துதல்.





கோழி வளர்ப்பு கருத்திட்டத்தின் பொருட்டு நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டம்.

இதற்க அமைய ஒவ்வொரு கருத்திட்டத்தின் பொருட்டும் பயிற்சி வேலைத் திட்டங்கள் 17 நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களது தேவைப்பாட்டிற்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாரு விலங்குகள் மற்றும் கால்நடை உணவுகள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| தொ.இ | பொருள் கொடை/விலங்குகள் | அளவு |
|---|---|---|
| 01 | திட்டமிடப்பட்ட கருத்திட்டத்தின் கீழ் மாட்டுத் தொழுவம் | 51 |
| 02 | மேலதிக மாட்டுத் தொழுவம் | 07 |
| 03 | பால் மாடுகள் | 52 |
| 04 | ஆடுகள் | 165 |
| 05 | கோழி குஞ்சுகள் | 3024 |

மாட்டுத் தொழுவங்கள் வழங்கும் போது 51 பேர் பொருட்டு மாட்டுத் தொழுவம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டனர். ஹாரிஸ்பதுவ மற்றும் அகுரனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் பயனுகாரிகளின் வஷேட வேண்டுகோலுக்கு அமைய அவற்றினை கவனத்திற் கொண்டு மேலதிகமாக 07 பயனுகாரிகள் பொருட்டு மாட்டுத் தொழுவம் அமைப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





பயனுகாரிகளுக்கு மூலப் பொருட்களை வழங்குதல்

தேசிய கால்நடை சபைக்கு உரிய போபன்தலாவ மெனிக் பாலம் பண்ணை பயனுகாரிகளுக்கு தேவையான பால் மாடுகள் மற்றும் ஆடுகள் என்பவற்றின் தெரிவு இடம் பெற்றது.





ஆடு மாடு என்பவற்றின் தெரிவு – தேசிய கால்நடைவளத்திற்கு உரிய போபத்தலாவ மெனிக் பாலம் பண்ணை

பயனுகாரிகளுக்கு வழங்குவதன் பொருட்டு இலங்கை ஹதபிம அதிகார சபையினால் ஒரு மாதக் கோழிக் குஞ்சுகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.





பூஜாபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் பயனுகாரிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்குதல்.

இதற்கு அமைய 03 மாதத்திற்குள் மிகவும் குறுகிய காலத்தினுள் கருத்திட்டத்தை இனங் கண்டு திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு 2011 ஆம் ஆண்டில் முடியுமாக இருந்தது.

# நிர்மானப் பிரிவு

நிர்மானத் துரைக்கு உரியதாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதன் பொருட்டு தேவையான மதிப்பீடுகள் மற்றும் தொழில்நுட்ப ஆவணங்கள் தயார் செய்தல் மற்றும் தொழில்நுட்ப நிலைய பராமரிப்பு பிரமானங்களை மதிப்பீடு செய்தல், பொருட்டு கொள்வனவு செயன்முறையின் தொழில்நுட்ப மதிப்பீடு, நிர்மானிக்கப்படும் ஸ்தானங்களை மேற்பார்வை செய்தல் உரிய பற்றுச் சீட்டுக்களை பரீட்சித்துப் பார்த்தல், மற்றும் சிபாரிசு செய்தல் என்பன பொறியியல் அலகிற்கான பிரதான பொறுப்புக்களாகும்.

## 2011 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

2011 ஆம் ஆண்டு வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்தவதற்கு உரிய நெல் அறுவடையை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு கைவிடப்பட்டு இருந்த வயல் நிலங்களை இனங்கண்டு அவற்றினை அறுவடை செய்வதற்கு தேவையான நீரை வழங்குவதற்காக சிறு நீர்ப்பாசன கருத்திட்டங்கள் 340 மற்றும் கிராமிய விவசாய உற்பத்திகளை நகரத்திற்கு எடுத்துச் செல்வதன் பொருட்டு வசதிகளை மேற்கொள்வதன் நிமித்தம் விவசாய வீதிகள் 337 நிர்மானிப்பதன் பொருட்டு தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பற்றுச் சீட்டுகள் மற்றும் பிரமானங்கள் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பணவுகள் சிபாரிசு செய்யப்பட்டன.



ஹாரிஸ்பதுவ மாலகம்மன தெபாவெல்ல



கலகெதர அக்கரவத்தை உடபார விவசாய வீதி

## முடிவுறா கருத்திட்டங்கள்

2006, 2007 மற்றும் 2008 போன்ற வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டதும் ஆயினும் முடிவருத்தப்படாத கருத்திட்டங்கள் மக்களது வேண்டுகோலுக்கு அமைய மீண்டும் அவற்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அமைய பலவருடங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டு இருந்த நிர்மான வேலைகள் பல பயன்பெறும் வகையில் முடிவுருத்தி மக்கள் பயன் அடையக் கூடியதாக இருந்தது.

### 1. அகுரனை உடவெலிகெடிய அமுனாவெலை பாலம் நிர்மானிப்பு

2008 ஆம் ஆண்டு நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலை முடிவுருத்தப்பட முடியாது போன இக்கருத்திட்டம் முடிவறா கருத்திட்ட நிர்மான முடிவுருத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு மீண்டும் நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சகல நிர்வாகப் பணிகளும் முடிவுருத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. இதனால் பயனுகாரிகள் 1680 பேரளவில் இக்கருத்திட்டத்தின் மூலம் பயன்

பெறுகின்றனர். நிர்மானம் பொருட்டு செலவு செய்த நிதித் தொகை ரூபா மில்லியன் 1.07 ஆகும். இப்பிரதேசத்தில் வாழும் பெறும்பான்மையான முஸ்லீம் மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் இதனை போக்குவரத்திற்காக பயன்படுத்துவதல் அவர்களது குறைபாடகா இருந்த கேபாக்குவரத்து வசதியின்மை இதன் மூலம் நீக்கப்பட்டது எனலாம்.



அகுரனை உடவெலிகெடிய அமுனுவெல பாலம்

## 2. அகுரனை உடவெலிகெடிய பாலத்தின் நுழைவு வீதி நிர்மானம்.

உடவெலிகெடிய அமுனேவல பால நிர்மானம் என்பவற்றுடன் இனைந்து அப்பாலத்தின் நுழைவு வீதியும் நிர்மனிப்பதன் தேவை இருந்ததால் ரூபா.1.02 மில்லியன் செலவில் அந்நுழைவு வீதியின் வேலை முடிவுருத்தப்பட்டு மக்களது போக்குவரத்து வசதிக்காக வழங்கப்பட்டது.

## 3. கண்டி தங்கொல்ல மவுன்ட் பிளாஸ்ட் தோட்ட வீதி கொங்ரீட் இடுதல்

ரூபா.0.88 செலவு செய்யப்பட்டு நிர்மானிக்கப்பட்ட இவ்வீதியில் பிரதேசத்தின் 465 பேர் அளவில் பயனுகாரி மக்களது நாளாந்த போக்குவரத்து நடவடிக்கைக்காகவும் அதேப் போல் விவசாய கைத்தொழில் நடவடிக்கைக்காகவும் பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் போக்குவரத்து நடவடிக்கைக்காகவும் பெறும் வசதியை வழங்குகின்றது.





**4. வெலிமடை போகஹகும்ர்ரை – தென்னெ கும்புர விவசாய வீதி கொங்ரீட் இடுதல்.**

2007 ஆம் ஆண்டு நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஆயினும் வேலை முடிவுருத்தப்படாது இருந்த இவ்வீதியின் நிர்மான வேலைகள் முடிவுறா கருத்திட்டம் நிர்மானங்களை முடிவுருத்தல் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வேலை முடிவுருத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது. விவசாய கைத்தொழில் மக்களது நாளாந்த போக்குவரத்து நடவடிக்கையின் பொருட்டு துனை நிற்பதுடன் இவ்வீதி நிர்மானத்தின் ஊடாக அங்கு வாழ் மக்களது சமூக பொருளாதார ரீதியில் உருதுனையாக அமைந்து இருப்பது தெளிவாகின்றது இதற்காக செலவிடப்பட்ட மொத்த நிதித் தொகை ரூபாய் மில்லயன் 2.99 ஆகும்.



**வெலிமடை போகஹகும்புர – தென்னேக்கும்புர விவசாய வீதி**

**5. அகுரனை சித்தோடை பாலம் மற்றும் வீதி கொங்ரீட் இடுதல்**

இக்கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டு தேசத்தை கட்டி எழுப்புவோம் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலை முடிவுருத்தப்படாத ஒரு கருத்திட்டமாகும். அதற்கு அமைய முடிவுறா கருத்திட்டங்கள் நிர்மான வேலைகள் முடிவுருத்தப்படும் வேலைத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு மீண்டும் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. மதிப்பிடப்பட்ட நிதித் தொகை ரூபாய் மில்லியன் 3.20 ஆகும். இங்கு 2011 ஆம் ஆண்டு இறுதியாகின்ற போது நிர்மான நடவடிக்கைகள் 35% அளவு முடிவுருத்தக் கூடியதாக இருந்தது. பயனுகாரிகள் 2475 இற்கு அதிக பயனளிக்கவல்ல இந்நிர்மானப் பணிகளது வேலைகள் மிக விரைவில் முடிவுருத்தி மக்கள் கைக்கு வழங்கப்படும்.

**6. ஹுதரலியத்தை நாரங்கஸ்பிடிய வீவல பாலம் நிர்மானித்தல்.**

நாரங்கஸ்பிடிய, அக்கரவத்த, தெஹிஅத்தேமட, விவல, வெலகம போன்ற மிகக் கஷ்டப் பிரதேசங்களில் விவசாய கிராமங்கள் பலவற்றின் மத்தியில் ஊடறுத்துச் செல்லும் ரம்புக்கள் ஓயா காரணமாக இக்கிராமங்கள் மிகவும் பின்தங்கிய நிலமையில் பல காலமாக திகழ்ந்து வந்தது. இந்நதிக்கு எதிரே ஒரு பாலத்தினை நிர்மானிப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அம்முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவுற்றிருந்தன. ஆற்றைக் கடந்து போக்குவரத்தை மேற்கொள்கையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர் பலர் இதனால் ஆபத்துக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளர். மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி கொடுப்பதுடன் பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியையும் கவனத்திற் கொணடு இக்கருத்திட்டம் 2009 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டு இருந்தது. இடர்பாடுகள் காரணமாக அந்நிர்மானப் பணிகள் இடை நடுவில் இடை நிறுத்த வேண்டிய நிலை

ஏற்பட்டது. இதன் நிர்மானப் பணிகள் மீண்டும் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மொத்த மதிப்பீடு ரூபா. 13.89 மில்லியன் ஆகும். இதுவரையில் முதலீடு செய்து இருப்பது ரூபா.மில்லியன் 5.51 ஆகும். 2680 பேர் அளவில் இதன் மூலம் போக்குவரத்து வசதியை பெறுவதுடன் போக்குவரத்து இடர்பாட்டை முடிவுருத்தும் நோக்கில் வேலை முடிவுருத்துவதற்கு திட்டமிடப்பட்டு பாலத்தின் நிமித்தம் நுழைவு வீதியும் நிர்மானிக்க வேண்டிய தேவை ஏற்பட்டதால் அங்கு வேலை முடிவுருத்த முடியாது போனது. எவ்வாறாயினும் இதுவரையில் நிர்மானப் பணிகள் 60% முடிவுருத்தப்பட்டு இருப்பதுடன் மீதமான வேலைகள் கூடிய விரைவில் முடிவுருத்தப்படும்.




**நிர்மானிக்கப்பட்டு வருகின்ற நாரங்கஸ்பிடிய விவல பாலம்.**

**7. உடுநுவரை பியராபிடிய நாகஹமுல ஹொரேகொடை வீதி அபிவிருத்தி செய்தல்.**

இக்கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டு தேசத்தை கட்டி எழுப்புவோம் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வேலை முடிவருத்தப்படாத கருத்திட்டமாகும். அதற்கு அமைய முடிவறா கருத்திட்டங்கள் நிர்மான வேலைகள் முடிவுருத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு மீண்டும் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியின் போது நிர்மான நடவடிக்கைகள் 60% அளவு முடிவுருத்துவதற்கு இயலுமாக இருந்தது. மதிப்பிடப்பட்ட நிதித் தொகை ரூபா மில்லியன் 3.07 ஆகும். இங்கு தற்போது மீதமான நிர்மானப் பணிகள் கூடிய விரைவில் முடிவுருத்தி மக்களுக்கு கையளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதுடன் அங்கு 620 பேர் அளவில் பயனடைவதுடன் விவசாய மக்களுக்கு நாளாந்தம் போக்குவரத்து நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்ளலாம்.



### 8. கொத்மலை நவ திஸ்பனே பலடதொகுதி கட்டத்தின் மீதமான நிர்மானப் பணிகள் முடிவுருத்தல்

நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் ஹரங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இக்கட்டடத்தின் நிர்மானப் பணிகள் 2007 ஆம் ஆண்டு அரும்பித்து வைக்கப்பட்டது . ஆயினும் இதன் வேலைகள் முடிவுரத்தாததன் காரணமாக 2011 ஆம் அண்டு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் தற்போது நிர்மான வேலைகள் 50மூ அளவு முடிவுருத்தப்பட்டுள்ளது. மீதமான நிர்மான வேலைகள் 2012 ஆம் ஆண்டு கூடிய விரைவில் முடிவுருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மக்கள பயன்பாட்டிற்காக அது வழங்கப்படும். இங்கு மதிபிடப்படட நிதித் தொகை ருபா மில்லியன் 0.92 ஆகும்.




### 9. கொத்மலை மாவெல சனசமூக கட்டட தொகுதியின் மீதமான வேலைத்திட்டம்.

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மாவெல கிழக்கு பிரிவில் அமையப் பெற்றுள்ள இக்கட்டடத்தின் நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்படாது இருந்ததன் காரணமாக 2011 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு முடிவுருத்தப்படுகின்ற போது நிர்மானப் பணிகள் 60% இற்கும் மேல் முடிவுருத்தப்பட்டுள்ளது. மீதமான நிர்மானப் பணிகள் கூடிய விரைவில் முடிவுருத்தி மக்களுக்கு ஒப்படைக்கப்படும். அதன் மூலம் 950 பேர் பயனுகாரிகள் பிரதேச வாசிகள் சங்கங்களை நடாத்துவதற்கும், பிள்ளைகளுக்கான முன்பள்ளிகளை நடாத்திச் செல்வதற்கும் பாரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு மதிப்பிடப்பட்ட நிதித் தொகை ரூபா மில்லியன் 1.30 ஆகும்.




**10. கொத்மலை மல்லன்த பல்நோக்கு கட்டடத்தின் மீதமான நிர்மானப் பணிகளை முடிவுருத்துதல்.**

நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் மல்லன்த பிரிவின் நிர்மானிக்கப்பட்ட இக்கட்டடத்தின் நிர்மானப் பணிகள் முடிவுருத்தப்பட்டு இருக்கவில்லை. இதன் காரணமாக இதன் வேலைகள் 2011 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் தற்போது அதன் வேலைகள் 60% அளவு முடிவுருத்தப்பட்டுள்ளதுடன் மீதமான வேலைகள் கூடிய விரைவில் முடிவுருத்தி மக்கள் பயன்பாட்டிற்காக அளிக்கப்படும். மதிப்பிடப்பட்ட நிதித் தொகை ரூபா.மில்லியன் 1.80 ஆகும். இங்கு மக்களது பொதுத் தேவைக்காக ஒன்று கூடுவதற்கு புதிய ஸ்தாபனம் கிடைக்கப் பெற்றமை அவர்களது பொது வேலைகள் பொருட்டு வசதிகளை வழங்குகின்றது எனலாம்.

**3). கருத்திட்டங்களை செயற்படுத்துகையில் முகம் கொடுத்த இடர்பாடுகள் பின்வருமாறு**

மேலே குறிப்பிடப்பட்ட நிர்மானப் பணிகள் மேற்கொள்கையில் பல்வேறு குறைபாடுகள் மற்றும் இடர்பாடுகள் ஏற்பட்டன அவையாவன,

01. உரிய ஆண்டினுள் கருத்திட்டங்கள் பல முடிவுருத்த முடியாது போனதால் முடிவுறாது இருந்தமை.
02. கருத் திட்டங்களை மேற்கொள்கின்ற ஒவ்வொரு வேலையிலும் மேற்பார்வையாளர் உதவியின் தட்டுப்பாடு நிலவியமை.
03. கொடுப்பணவு மேற்கொள்கையில் பற்றுச் சீட்டுக்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம்.
04. கருத்திட்டங்களின் பொருட்டு ஆரம்பத்தில் ஒதுக்கீடு கிடைக்காமையால் வருட இறுதியின் போது கருத்திட்டங்களை முடிவுருத்த இயலாது விடுதல்.
05. எதிர்பார்த்த காலத்தினுள் கருத்திட்டங்களை பின்வரும் காரணங்களினால் முடிவுருத்த இயலாது போனது.
    - i. காலநிலைப் பிரச்சினை
    - ii. திட்டமிடலில் மாற்றம் ஏற்பட்டமை மற்றும் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டமை
    - iii. பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர் தட்டுப்பாடு
06. செயன்முறைப் பிரச்சினை மற்றும் ஏனைய பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன அதனால் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கலாயின.

இந்தக் குறைபாடுகள் ஏற்பட்ட போதிலும் 2011 ஆம் ஆண்டு இலக்கினைக் கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்களில் 90% அளவு முடிவுருத்த இயலுமானது.

# நிதி முகாமைப் பிரிவு

**2011.டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான ஐந்தொகை**

| | 2011 ரூபா.சதம் | 2010 ரூபா.சதம். |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காணி மற்றும் உபகரணங்கள் | 28,566,391.59 | 31,429,932.77 |
| **நடைமுறை சொத்தக்கள்** | | |
| இருப்பு | 411,838.45 | 262,343.15 |
| நிலையான வைப்பு | 5,863,157.13 | 5,000,000.00 |
| பல்வேறு கடன் படுனர் | 203,550.00 | 403,950.00 |
| கிடைக்க வேண்டிய வைப்புக்கள் | - | 105,000.00 |
| கிடைக்க வேண்டிய சுழல் நிதி | 6,151,455.01 | 6,382,743.25 |
| முற்பணம் | - | 6,400.00 |
| காசு மீதி - i | 53,513,849.01 | 54,078,972.42 |
| காசு மீதி - ii | 953,829.51 | 2,058,356.03 |
| வைப்புகள் | - | 75,000.00 |
| கிடைக்க வேண்டிய கொடை நிதி | - | 103,408,269.85 |
| கிடைக்க வேண்டிய முற்பணம். | 55,000.00 | 80,025.04 |
| **மொத்த சொத்துக்கள்** | **146,834,761.07** | **203,290,992.51** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | |
| மிதக்கிவிடப்படல் | 1,082,489.78 | 877,546.33 |
| இடர் ஒதுக்கீடு | 895,152.50 | 1,093,447.08 |
| உறப்பெற்ற செலவு | 636,650.85 | 621,406.76 |
| பல்வேறு கடன் கொடுனர் | | 108,855.84 |
| மிதக்கவிடல் வரி | 4,400.00 | 20,961.21 |
| செலுத்த வேண்டிய முடிவுறா | 50,127,342.70 | 137,727,371.22 |
| செலுத்த வேண்டிய வைப்பு | 1,565,000.00 | 1,565,000.00 |
| பினை வைப்பு | 60,500.00 | 19,500.00 |
| வேறு கொடுப்பணவுகள் | - | 89,000.00 |
| தேறிய சொத்துக்கள் | **42,463,225.24** | **61,167,904.06** |
| **உரிமைகள் பொறுப்பக்ள்** | | |
| அரச ஒதுக்கிட்டுக் கணக்கு | 28,944,324.92 | 31,807,866.09 |
| மேலதிகம்/குறைபாடு | 63,518,900.32 | 29,360,037.97 |
| | **92,463,225.24** | **61,167,904.06** |

**2011, டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவு கூற்று**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா.சதம் | ரூபா.சதம். |
| **நிதி கிடைத்தல்** | | |
| திறைசேரி - மூலதன | 213,787,035.00 | 301,069,044.70 |
| - மீண்டுவரும் | 22,908,190.00 | 20,889,000.00 |
| பல்வேறு வருமானங்கள் | 1,338,661.85 | 2,353,604.78 |
| அரச ஒதுக்கீட்டு கணக்கு | 3,076,506.17 | 3,592,101.01 |
| சுழல் நிதி | 1,009,470.00 | |
| **மொத்த பெறுகைகள்** | **242,119,863.02** | **327,903,750.49** |
| **கண்காணிப்புச் செலவுகள்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 15,491,867.68 | 14,372,109.82 |
| போக்குவரத்து செலவு | 385,272.59 | 504,973.30 |
| வழங்கள்கள் மற்றும் ஏனைய | 1,591,099.62 | 2,103,999.39 |
| பராமரிப்புச் செலவுகள் | 3,612,108.77 | 3,842,763.10 |
| ஒப்பந்த சேவைகள் | 1,331,050.98 | 1,251,082.46 |
| மீதி | 3,076,506.17 | 3,592,101.01 |
| ஏனைய கண்காணிப்பு செலவுகள் | 3,072,808.46 | 2,481,791.69 |
| அபிவிருத்தி செலவுகள் | 207,879,862.15 | 292,193,041.90 |
| **மொத்த கண்காணிப்பு செலவுகள்** | **236,440,576.42** | **320,341,862.67** |
| மேலதிகம்/குறைபாடு – கண்காணிப்பு | 5,679,286.60 | 7,561,887.82 |
| கீ.செ.மிதி | 57,839,613.72 | 21,798,150.15 |
| மொத்த மேலதிகம்/குறைபாடு | **63,518,900.32** | **29,360,037.97** |

2010 ஆம் ஆண்டு நிதி முகாமை பிரிவினால் ஐந்தொகை தயாரிக்கையில் சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி உயர்ந்து காணப்பட வில்லை 2011 ஆம் ஆண்டு தளபாடம் மற்றும் உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு நிலையான சொத்துக்கள் மீதி ரூபா.மில்லியன் 3.076 ஆகும்.

சுழல் நிதியின் ஊடாக நடாத்தப்பட்டு வருகின்ற நிலையான வைப்புக்கள் 2010 ஆம் ஆண்டினை விடவும் ரூபா.863,157.13 அதிகரித்துக் காணப்பட்டது.

2010 ஆம் ஆண்டு மற்றும் சமப்படுத்தி பார்க்கையில் செலுத்த வேண்டிய அபிவிருத்தி செலவுகள் அதிகம் குறைந்து இருந்தமையை காணலாம். இதற்கான காரணம் வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் அதிக கருத்திட்ட எண்ணிக்கை செயற்படுத்துதல் மற்றும் 201.12.31 ஆம் திகதி ஆகின்ற போது இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா.மில்லியன் 213 ம், ரூபா.மில்லியன் 191.438 நிதி தொகையை செலுத்தி முடிவுறுத்த இயலுமானதாக இருந்தது. அதன் காரணமாக 2012 ஆம் ஆண்டு முடிவுறா மற்றும் உடன்படிக்கை கொண்டுள்ள கருத்திட்டங்களின் பெறுமதி ரூபா.மில்லியன் 50.127 ஆகும்.

2011 ஆம் ஆண்டு திறைசேரியின் ஆனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபா.மில்லியன் 300 ஆகும். 2011 ஆம் ஆண்டு அவ்வனுமதிக்கப்பட்ட மூலதனத்தில் ரூபா.மில்லியன் 213 கிடைக்கப் பெற்றது. கிடைக்கப் பெற்ற மூலதனத்தின் வீதாசாரமானது 71% ஆகும்.

அவ்வாறே, மீண்டெழும் கிடைப்பணவுகள் அதிகரிப்பு கடந்த வருடத்திற்கு எதிராக ரூபா மில்லியன் 2.01 ஆகும். அது 9.6% வீதமாகும்.

## <u>மொத்தச் செலவுகள்</u>

| தொ.இல | விபரம் | **2011** | **2010** |
|---|---|---|---|
| 1 | மீண்டுவரும் செலவினம் | 23,795,572.00 | 24,556,719.76 |
| 2 | அபிவிருத்திச் செலவு | | |
| 2.1 | தேசத்தை கட்டி எழுப்புதல் | | |
| | பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | - | 140,995,227.80 |
| | கல்வி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி | 137,074,342.65 | 3,125,478.08 |
| 2.2 | விஷேட கருத்திட்டம் (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு) | 11,212,610.45 | 5,640,478.66 |
| 2.3 | நிர்வாகச் செலவுகள் | 8,534,626.93 | 4,704,487.00 |
| 3 | நிலையான சொத்தக்களழன் கொள்வணவு மற்றும் புணர்நிர்மானம் | 212,965.00 | 1,156,867.37 |
| 4 | முடிவறா கொடுப்பணவு மற்றும் ஒப்பந்த கொடுப்பணவுகள் | 81,031,682.44 | 39,682,357.78 |
| | **மொத்தம்** | **261,861,799.47** | **219,861,616.45** |

## மிண்டுவரும் செலவினம்.

| | | 2011 | % | 2010 | % |
|---|---|---|---|---|---|
| 1 | ஆளுக்குரிய வேதனாதிகள் | 15,391,718.00 | 64.68 | 14,372,109.82 | 58.53 |
| 2 | போக்குவரத்துச் செலவு | 522,711.84 | 2.20 | 504,973.30 | 2.10 |
| 3 | வழங்கள்கள் மற்றும் சேவைகள் | 3,204,353.24 | 13.47 | 2,103,999.39 | 8.57 |
| 4 | பராமரிப்பு | 2,312,751.91 | 9.72 | 3,842,763.10 | 15.65 |
| 5 | ஒப்பந்த சேவைகள் | 2,364,037.56 | 9.93 | 1,251,082.46 | 5.13 |
| 6 | ஏனைய | - | | 2,481,791.69 | 10.02 |
| | | 23,795,572.00 | 100.00 | 24,556,719.76 | 100.00 |

2011 ஆம் அண்டு மிண்டுவரும் செலவினம் ரூபா. மில்லியன் 23.795 ஆகும். 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது ரூபா. மில்லியன் 0.761 ஆக குறைந்து காணப்பட்டது. ஆளுக்குரிய வேதனாதிகள் வழங்கும் பொருட்டு ரூபா.15.391 மில்லியன் செலவு 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா.1.019 இனால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்புக்கான காரணம் என்ன என்பதை விஷேடமாக குறிப்பிடுகையில் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 30(1) இற்கு அமைய நிலுவைச் சம்பளம் வழங்கியமை ஆகும். வாழ்க்கைப்படி அதிகரிப்பு மற்றும் உதவிப் பணிப்பாளர் (கால்நடை வள) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்து கொள்ளல் என்பன 2011 இல் ஏற்பட்ட விடயங்களாகும்.

2010 ஆம் ஆண்டு ஒப்பீட்டு பார்க்கின்ற போது வழங்கள்கள் மற்றும் சேவையின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா. மில்லியன் 1.1 இனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. எரி பொருளின் விலை ஏற்றம் முகாமைத்துவச் சபை கொடுப்பணவு அதிகரித்தல் மற்றும் சகல பொருட்கள் சேவைகள் விலை 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு பார்க்கையில் அதிகரித்துக் காணப்பட்டமை என்பன பிரதான காரணங்களாகும். அவ்வாறே, ஒப்பந்த சேவைகளின் பொருட்டு ஏற்படும் செலவு 2011 ஆம் ஆண்டு ரூபா. மில்லியன் 1.331. ஆகும். இது 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு பார்க்கையில் ருபா. மில்லியன் 0.008 இனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. நீா் மின்சாரப் பட்டியல்களின் விலை உயருதல், எரிபொருள் விலையேற்றம் வரி வாடகை அதிகரித்தல் வாகனங்களது காப்பறுதிக்காக அதிக செலவு ஏற்படுதல் போன்ற காரணங்களினால் இவ்வுயா்வு காணப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு கடுகண்ணாவை வா்த்தக சந்தைக் கட்டடத் தொகுதியின் வருமானம் ரூபா மில்லியன் 0.668 ஆகும். அது 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. மில்லியன் 0.25 இனால் அதிகரித்துக் காணப்படுகின்றது. விஷேடமாக கடுகண்ணாவை வா்த்தகக் கட்டடத் தொகுதியின் அறவிடப்படாது இருந்த கடை அறைகளது வாடகை நினைவூட்டல் கடிதத்தின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு இயலுமாக இருந்தமை கடை அறை வாடகை செலுத்தாது இருந்த இலக்கம் 09 இலக்கம் 10 போன்ற கடை அறைகள் மீண்டும் பகிா்ந்து கொடுத்தமை இதற்கு காரணமாகும். அவ்வாறே பெலிஹு-ல் ஒயா தியபகச கிமன்ஹல என்பதில் இருந்து ரூபா.17.532 வருமானம் 2011 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றது.

அவ்வாறே 2011 ஆம் ஆண்டு பேராதனை தாவரவியற் பூங்காவின் செடி சந்தைப்படுத்தல் நிலையம் ஆரம்பித்து வைத்தமை போன்றவற்றை விஷேடமாக குறிப்பிட வேண்டும். தேசத்தை கட்டி எழுப்புவோம் வேலைத் திட்டத்தினால் செயற்படுத்தப்பட்ட இந்த சந்தைப்படுத்தலில் 2011.12.31 ஆம் திகதி தேறிய இலாபம் ரூபா. 77.695 ஆகும்.

## அபிவிருத்திச் செலவுகள்

01. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | 2011 | % | 2010 | % |
|---|---|---|---|---|---|
| 1 | பூஜாபிடிய | - | - | 30,874,193.07 | 21.90 |
| 2 | அகுரனை | - | - | 19,152,013.50 | 13.58 |
| 3 | ஹாரிஸ்பதவ | - | - | 44,092,482.02 | 31.28 |
| 4 | ஹதரலியத்தை | - | - | 19,731,683.70 | 13.99 |
| 5 | கலகெதர | - | - | 27,144,855.57 | 19.25 |
| | | **-** | **-** | **140,995,227.80** | **100.00** |

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் 2010 ஆம் ஆண்டு ரூபா. மில்லியன் 140.995 செலவு செய்யப்பட்டு இருந்தது. ஆயினும் 2011 ஆம் ஆண்டு வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி அபிவிருத்தி போன்ற வகுதிகளில் 02 இன் கீழ் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இதன் காரணமாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் 2011 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் செலவுகள் குறிப்பிடப்படவில்லை.

### 02). வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி அபிவிருத்தி

| தொடர் இலக்கம் | பிரதேச செயலாளர் பிரிவு | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|
| | | வாழ்வாதார அபிவிருத்தி | கல்வி அபிவிருத்தி | வாழ்வாதார அபிவிருத்தி | கல்வி அபிவிருத்தி |
| 1 | பூஜாபிடிய | 109,567,663.21 | 27,506,679.44 | 2,202,583.81 | 922,894.27 |
| 2 | அகுரனை | | | | |
| 3 | ஹாரிஸ்பதவ | | | | |
| 4 | ஹதரலியத்தை | | | | |
| 5 | கலகெதர | | | | |
| | **மொத்தம்** | **109,567,663.21** | **27,506,679.44** | **2,202,583.81** | **922,894.27** |

வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டு ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டு கவனத்திற் கொள்ள வேண்டிய அபிவிருத்தி காணப்படுகின்றது.

விஷேடமாக 2011 ஆம் ஆண்டு வாழ்வாதார மற்றும் கல்வி அபிவிருத்தி போன்ற பிரமானங்கள் 02 இன் கீழ் மாத்திரம் கருத்திட்டம் செயற்படுத்துவதற்கான காரணமாக குறிப்பிட முடியும். சகல அணைகள் விவசாய வீதிகள் நிர்மானம் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 2010 ஆம் ஆண்டு உடன் ஒப்பிடுகயைில் 2011 ஆம் ஆண்டு வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு செலவினை கவனத்திற் கொள்ள வேண்டிய அதிகரிப்பை காட்டி நிற்கின்றது. 2010 ஆம் ஆண்டு எதிர்பார்த்த கல்வி அபிவிருத்தி கருத்திட்டம் பெறும் அளவில் செயற்படுத்துதல் மற்றும் அது தொடர்பில் நிதி விடுவிப்புச் செய்தல் 2011 ஆம் ஆண்டு இடம் பெற்றன. விஷேடமாக மலசலகூட வசதிகளை பெற்றுக் கொடுத்தல் அறநெறிப் பாடசாலை மற்றும் கலாசார பொருட்டு உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல் இங்கு விஷேடமாக குறிப்பிட முடியும்.

## <u>2010 ஆம் ஆண்டு கணக்கு அலகினால் மேற்கொள்ளப்பட்ட விஷேட செயற்பாடுகள்</u>

01. கடந்த ஆண்டுகளில் அறவிடுவதற்கு முடியாது போன சுழல் நிதி பிரதேச செயலாளர் மட்டத்தில் சேகரித்து கொள்வதற்கான புதிய வேலைத்திட்டம் இனங்காணப்பட்டமை. இதனால் ரூபா. 07 மில்லியனுக்கு கிட்டிய தொகை நிதி அறவிட முடிந்தது.

02. முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை 30(1) இற்கு அமைய நிலுவைச் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை மற்றும் ஊழியர்களுக்கு புதிய சம்பளப் படிநிலைகளில் நிலை நிறுத்தியமை

03. அரச நிறுவனங்களின் அலுவல்கள் செயற்பாடுகள் சரியாக மேற்கொள்வதன் பொருட்டு சகல பதவியணியினருக்கும் அறிவூட்டல் நிகழ்சி கணக்கு வைப்பது தொடர்பான பயிற்சி வேலைத் திட்டம் நடாத்துதல்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / MyNo. சீஎல்/கேடீ/எச்/யூடீஏ/2011- எப்ஏ/2012/13

ඔබේ අංකය / உமது இல / No.

දිනය / திகதி / Date 2012 ஒக்தோபர் 16

தலைவர்

இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க இலங்கை உடரட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ)பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2012 யூலை 12 ஆம் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாகும்.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் மாதத்தில் எழுதப்பட்ட எனினும் குறித்த பொருட்களை வழங்காத காரணத்தால் 2012 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் வழங்கப்படாமல் இருந்த ரூபா 25,145,466 பெறுமதியான 16 காசோலைகளில் ரூபா 20,756,690 பெறுமதியான 05 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. அக்காசோலைகளின் பெறுமதி ஆண்டின் செலவினத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்திச் செயற்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு திறைசேரியிலிருந்தும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்தும் கிடைத்த ரூபா 53,513,844 ஆன காசு மீதியொன்று இருக்கையில் அதனைக் கருத்திற்கொள்ளாமல் தொடர்வேலை மற்றும் பொறுப்புக்களுக்காக திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதாகக் கருதி ரூபா 50,000,000 தொகையினை கணக்கீடு செய்தததன் காரணமாக அப்பெறுமானத்தால் நடைமுறைச் சொத்துக்கள் (கிடைக்க வேண்டிய நிதியம்) மற்றும் திரண்ட நிதியம் என்பன கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட எனினும் எவ்வித செலவினமும் செய்யப்படாத ரூபா 32,478,637 பெறுமதியான 158 நிர்மாண வேலைகளை எதிர்வரும் ஆண்டில் நிறைவேற்றும் நோக்கில் அதற்குரிய பெறுமதி முழுவதும் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 56-6504 மற்றும் 254-0401 ஆம் இலக்கங்களுடைய 2 வாகனங்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் மற்றும் அரசாங்க மானியம் என்பவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 26 ஆம் இலக்க இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் அதிகாரப் பரப்பு 08 மாவட்டங்களில் வியாபித்துக் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அதன் செயற்பாடுகள் கண்டி மாவட்டத்தின் 05 பிரதேச செயலகப் பிரிவுகளிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின்

---

| | | |
|---|---|---|
| i | நி.பி 237 | பொருட்கள் அல்லது சேவைகள் கிடைக்கப் பெற்றிருந்தமைக்கான இருப்புச் சான்றிதழொன்று இல்லாமல் கொடுப்பனவை அங்கீகரித்தல்/ சான்றுறுதிப்படுத்தப்பட முடியாத போதிலும், ரூபா 23,345,466 பெறுமதியான 16 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்குரிய பொருட்கள் கிடைக்கப் பெறாதிருக்கும் போது கொடுப்பனவு அங்கீகாரமும் சான்றுதிப்படுத்தலும் இல்லாமல் காசோலை எழுதப்பட்டிருந்தது. |
| ii | நி.பி. 212(2) | சம்பளத்தில் 40% எல்லை வரை மட்டுமே சம்பள முற்பணம் வழங்க முடியுமாக இருந்த போதிலும், இரண்டு உத்தியோகத்தர்களுக்காக 51% முதல் 68% வரையான சம்பள முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

**2.2.3 போதியளவில் அதிகாரம் பெறப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

---

பேராதனை பல்கலைக்கழகத்தில் நடாத்திச் செல்லப்பட்டு வந்த பால் விற்பனை நிலையத்தை மூடியமையால் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 107,500 வாடகை உரிய கடன்பட்டோர் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான தலைவரின் பதிலின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுவதால் மேற்படி கணக்கிலிருந்து பதிவழிப்புச் செய்திருந்தமை பொருத்தமானதல்லது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

### 2.2.4 வெளிப்படையான ஒழுங்கீனமான /முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திவிநெகும வீட்டுப்பொருளாதார அலகு செயற்திட்டத்தின் கீழ் 5100 நாற்றுக்களின் தேவைப்பாடு இனங்காணப்பட்டிருக்கும் போது முறையற்ற அடிப்படையொன்றின் கீழ் ரூபா 306,000 பெறுமதியான 10200 நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் கூடுதலாகப் பெற்றுக்கொண்ட நாற்றுக்களை வெளிக்களத்தில் ஈடுபடுத்த போதியளவில் இடவசதிகள் இல்லாதிருக்கையில் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்க நேர்ந்திருந்தன.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்திற்கு இணையாக கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக 3,024 கோழிக்குஞ்சுகள் தேவைப்பட்டிருக்கையில் எவ்வித அடிப்படையுமில்லாமல் 6000 கோழிக்குஞ்சுகள் கட்டளையிடப்பட்டதால் ரூபா 892,800 பெறுமதியான 2,976 கோழிக்குஞ்சுகள் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அக்கோழிக் குஞ்சுகள் கிடைக்கப் பெறவில்லை எனினும் ரூபா 1,800,000 தொகையான மொத்தப் பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டு காசோலை எழுதப்பட்டிருந்தது. 2012 ஏப்ரல் வரையில் அதில் 1616 குஞ்சுகள் மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 5,679,287 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,561,888 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 1,882,601 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அபிவிருத்திச் செலவினத்தில் அதிகரிப்பு, ஆளணி வேதனம், உடன்படிக்கை சேவைகள் உட்பட அனைத்துச் செலவினங்களும் அதிகரித்தமை இக்குறைவு தொடர்பில் பிரதானமாகத் தாக்கம் செலுத்தியுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் 04 பிரதான பிரிவுகளின் கீழ் ரூபா 300 மில்லியன் தொகைக்கான 1147 அபிவிருத்தி செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 210 மில்லியன் அளவிலான செயற்பாடுகள் நிறைவேற்றக் கூடியதாக இருந்ததுடன், அதன் சதவீதம் 70% ஆக இருந்தது. இவ்வறிக்கையின் 2.2.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொள்ளும் போது மீளாய்வாண்டிற்கான பௌதீக செயல்முன்னேற்றம் ரூபா 185 மில்லியன் அதாவது 61% ஆக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மஞ்சல் மற்றும் இஞ்சி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மஞ்சல் மற்றும் இஞ்சி என்பவற்றை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் அதற்குப் புறம்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்படாத விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத தனிப்பட்ட நாற்றுமேடையாளர் ஒருவரிடமிருந்து 7027 கிலோ கிராம் மஞ்சல் மற்றும் இஞ்சி விதைகளை கூடிய விலையில் கொள்வனவு செய்தமையால் நிறுவனத்திற்கு ரூபா 262,300 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அதில் அதிகளவிலான விதைகள் முளைக்காமை, பழுதுடைந்திருந்தமை மற்றும் பின்னர் அழிவடைதல் போன்ற காரணங்களினால் மஞ்சல்/ இஞ்சி விதைகளுக்காக அதிகாரசபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த (சுழற்சி நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட) 50% ஆன தவணைப் பணம் உரிய வகையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடுகண்ணாவ வியாபார கடைத் தொகுதிக்குரிய 02 கடைகள் பால் சங்கமொன்றாகவும் தேனீ வளர்ப்பு சங்கமொன்றாகவும் என தெரிவித்து மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அக்கடைகளுக்காக திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புத் தொகையான ரூபா 200,000 பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்ததுடன், மேலதிகப் பரிசோதனையின் போது இவ்வாறான பால் சங்கமொன்று மாகாண கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அதன் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் சுயதொழிலில் ஈடுபடுவோருக்காக அலங்கார உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 2,338,590 செலவிடப்பட்டிருந்ததுடன், உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 4 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. கொள்வனவு செய்வதற்குரிய பொருட்களின் பண்புகள் முன்னரே தீர்மானிக்கப்படாமல், ஒரே நபரினால் சமர்ப்பிக்கப்பபட்ட போலியான 03 விலை மனுக்களை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்தமை, சில ஆபரணங்கள் அவை அணிவதற்கு பொருத்தமற்றதாக உரிய நலனாளிகளினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

(அ) கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.9.1 ஆம் பிரிவிற்கு திருத்தமாக 2011 மார்ச் 09 ஆம் திகதிய கொள்வனவு கைநூலிற்கான மேலதிகமாக பிரதேச செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர் ஆகியோரால் பெயரிடப்படுகின்ற இரண்டு முகவர்களைக் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கத்திற்கு ரூபா 2 மில்லியன் வரை ஒப்பந்தங்களை கேள்வி கோராமலேயே வழங்க முடியுமான போதிலும் ரூபா 13,894,175 மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் ரூபா 3,204,882 தொகைகளுக்குரிய நாரங்கஸ்பிட்டிய வீவல பாலம் மற்றும் சிற்றோடை பாலம் ஆகிய ஒப்பந்தங்களுக்கு அந்த எல்லையைக் கருத்திற்கொள்ளாமல் 02 அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே வழிகாட்டிக்கோவையின் 5.4.4(11) ஆம் உப பிரிவின் பிரகாரம் அச்சங்களுக்காக வங்கி பிணைப்பொறுப்புக்கள் இன்றி முற்பணம் வழங்கப்படக்கூடிய ரூபா 200,000 உயர் எல்லையை மிகைத்து ரூபா 2,135,894 தொகையும் ரூபா 288,549 தொகையும் முற்பணமாக, முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 1,015,944 மதிப்பீட்டுப் பெறுமதியான பேராதனை தாவரவியல் பூங்காவினுள் 18'x25' அளவிலான மரக் கன்று விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம், உரிய காணியைப் பொறுப்பேற்காமல் முறையான உடன்படிக்கை இல்லாமலும் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமலும் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2006 கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 5.4.4 ஆம் பந்திக்கு முரணாக பாதுகாப்பு பிணையொன்றை பெற்றுக்கொள்ளாமல் 20% முற்பணம் ரூபா 199,560 செலுத்தப்பட்டிருந்தது. 05 வேலை விடயங்களுக்குரிய ரூபா 220,904 தொகையான மிகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நியமங்களுக்கு இணங்கவும் முறையாகவும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக செய்யப்பட்ட வேலைக்கு கொடுப்பனவு இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

(இ) ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவின் மாபாமடுள்ள பிரிவில் கெஹெல்தெனியா வெளி கால்வாயினை அபிவிருத்தி செய்தல் வேலை தொடர்பாக அதன் கால்வாயின் அடித்தளத்தில் 06 அங்குல தடிப்பில் கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும், மிகவும் பலவீனமான கலவையுடன் கூடிய 02 அங்குல தடிப்பில் கொங்கிரீட் இடப்பட்டமையால் அதன் உறுதிப்பாடு நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டதுடன், அதற்குரிய மேற்கொள்ளப்படாத வேலைக்காக ரூபா 154,017 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கால்வாயின் நிர்மாணத்திற்காக மண்வெட்டுவதற்காக கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 21,695 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அகுரணை பிரதேச செயலகப் பிரிவில் அவலத்துகொடை பிரிவில் பொல்தெனிய யாய வயலின் கால்வாயை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 731,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வாய்க்காலின் கொள்ளளவிற்கு போதிய தடிப்பிலும் உறுதிப்பாடு இல்லாமலும் 4 அங்குல தடிப்பில் வாய்க்கால் சுவர் திட்டமிடப்பட்டிருந்தமை அதற்கு குறைந்த தடிப்பிலும் பலவீனமான ஓரச் சுவர் அமைக்கப்பட்டிருந்தமை, சுற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட கம்பி வெளிப்படும் இடங்கள் காணப்பட்டமை சில இடங்களில் 3.25 அங்குலத்திற்கு குறைவான தடிப்பில் காணப்பட்டமை போன்ற காரணங்களால் கால்வாயின் உறுதிப்பாடு குறுகிய காலமாக இருந்தமை மற்றும் கால்வாயின் அடித்தளத்தில் செய்யப்படாத வேலைக்காக ரூபா 77,466 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) **இரத்துச் செய்யப்பட்ட வேலைகள்**

மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,398,699 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 07 வேலைகள் 2012 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் 02 வேலைகளுக்காக ரூபா 43,620 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந்த 07 வேலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

**4.5 பதவியணி நிர்வாகம்**

உரிய தகைமைகளை பரீட்சிக்காமல் பணிப்பாளர் அபிவிருத்தி மற்றும் பொறியியலாளர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**4.6 வாகனப் பயன்பாடு**

(அ) நிறுவனத்திடமுள்ள 03 பழைய வாகனங்கள் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அலுவலக வளவில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) 15 வாகனங்களின் 2012 சனவரி முதல் 2012 ஏப்ரல் வரையான 04 மாதங்களுக்குரிய ஓட்டப்பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**5.1 கூட்டுத் திட்டம்**

அதிகாரசபையால் 2008 - 2012 வரை ஐந்து ஆண்டுகளுக்குரிய கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுத் திட்டத்தில் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளில் அதிகமானவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2. செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கிராமசேவைப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட ரூபா 300 மில்லியன் பெறுமதியான 1147 வெவ்வேறு வேலைகள் மற்றும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் ஒவ்வொரு வேலைக்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளை காட்டும் வகையில் விபரமாக காட்டப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கொள்வனவுத் திட்டம்

ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அது நடைமுறைச்சாத்திய அடிப்படையில் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், அத்திட்டம் நாளதுவரையாக்கப்படுதல் அல்லது கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்துதல் இடம் பெற்றிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 08 மீண்டுவரும் செலவின விடயங்களுக்குரிய 16% முதல் 99% வரையான நிதி ஏற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், 08 மீண்டுவரும் செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடு போதியதாக இல்லாமையால் 38% முதல் 312% வரையான நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 06 மூலதனச் செலவின விடயங்களில் 29% முதல் 100% வரையான அல்லது ரூபா 123,522,256 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வுப் பரிசோதனையின் போது புலனாகிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) செயற்திட்ட அமுலாக்கல்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) சம்பள முற்பணக் கொடுப்பனவு
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) கணக்கீட்டுப் புத்தகங்கள் பராமரித்தல்

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி